147

147

KAVERI VACHAGAM

BOOK III

(Based on the New Syllabus, 1939.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1942
MADRAS

VIDWAN M. RAJAMANIKKAM, B.O.L.
Tamil Pandit, Muthialpet High School, Madras.

906

K. R. VARDON & CO.
TANJORE

காவேரி வாசகம்

மூன்றும் புத்தகம்

(Based on the New Syllabus, 1939)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1942
MADRAS

ஆசிரியர் :

வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.,

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

494.81186
906

கே. ஆர். வார்டன் அண்ட் கம்பெனி,

தஞ்சாவூர்

பதிப்புரிமை] 1941 [விலை அணா 5

P3119

Printed at the Jupiter Press, Madras.

முகவுரை

காவேரி வாசகம் என்னும் பெயருடைய இத் தமிழ்ப்பாட வரிசை, கல்வித்துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள **புதிய பாட இயல் (Syllabus)** படி எழுதப்பெற்றது. புதிய பாட இயலில் குறிப்பிடப்பட்டுள்ள **ஒவ்வோரு குறிப்பும்** இதன்கண் இடம் பெற்றுள்ளது. மாணவர் பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய தமிழ் அறிவினையும், பொது அறிவினையும் பெறச் செய்தலே இந்நூல் வரிசையின் நோக்கமாகும்.

பாட இயலிற் கண்டவாறே **புதிய சொற்கள்** பாடந்தோறும் தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு நூலிலும் பிள்ளைகளது தகுதிக்கேற்றபடி கதை, கைத்தொழில், பயிர்த்தொழில், சுகாதாரம், உரையாடல், இலக்கியம், நாடகம் முதலிய அறிவியல் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறே எளிய முறையில் அமைந்த பழைய பாடல்களாகிய கும்மி, தாலாட்டு, அம்மானை, பந்தாட்டம், ஊசல், பள்ளு, குறம் முதலியனவும் புதிய பாடல்களும் நடிப்புக்குரிய பாடல்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் **கேள்விகள், பயிற்சி, இலக்கணம்** என்பவை வகுப்புக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. **மௌன வாசிப்பின்** அவசியம் கதைப் பாடங்கள் மூலமாகவும் படப்பயிற்சிகள் மூலமாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. கடிதம், கட்டுரை முதலியன எழுதுதற்குத் தக்கவாறு சில பாடங்களும், மாதிரிக் கடிதங்களும் எழுதப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், காவேரி வாசக வரிசை—செவிலித்தாய் போல் மக்களுக்குத் தன் நன்னீரை அளித்துக் காக்கும் புகழ் மிக்க காவேரி ஆறுபோல்—தமிழ் மாணவர்க்கு அறிவினை ஊட்டும் செவிலித் தாயாக அமைவுறும் எனல் மிகையாகாது.

மா. இராசமாணிக்கம்

ஆசிரியர்க்கு :

1. பாட இயலிலும், தமிழ்ப்பாட நூலிலும் கண்டுள்ள வகுப்புக்கேற்ற நிறுத்தக் குறிகளைப் பற்றிய அறிவைத் தெளிவுற ஊட்டி, அவை இடவேண்டும் இடங்களை நன்கு உணர்த்திப் பழக்குதல் இன்றியமையாதது. பொருள் விளங்கும்படி வாசித்தற்கு நிறுத்தக் குறிகள் இன்றியமையாதவை என்பது பிள்ளைகள் உள்ளத்தில் நன்கு பதியச் செய்தல் நல்லது.

2. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் தரப்பட்டுள்ள பயிற்சியில் நன்கு பழகும்படி மாணவரை ஊக்குதல் நற்பயிற்சியாகும். பயிற்சிகளிற் பழகும் மாணவர் அறிவு விரைவில் நிறைவுறும் என்பது கல்வி அறிஞர் கருத்தாகும். பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, மேலும் பல உதாரணங்கள் தந்து, பிள்ளைகளைப் பழக்குதல் சிறப்புடையது.

3. குறிப்புப் புத்தகம்—அவசியமான பத்திரிகைச் செய்திகளை ஒட்டிவைத்துக்கொள்ளும் நோட்டுப் புத்தகம் — என்பவற்றின் அவசியத்தைப் பிள்ளைகளுக்கு விளக்கி, அவற்றை வைத்துக் கொண்டு பழகுமாறு செய்தல் ஆசிரியர் அருங்கடனாகும்.

4. பிள்ளைகளைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், அவ்விடங்களைப்பற்றிய செய்திகளை விளக்குதல், அவற்றைப்பற்றிக் கட்டுரை வரையச் செய்தல், பத்திரிகைச் செய்திகளை நாள்தோறும் அறிவித்துப் பிள்ளைகட்கு உலக அறிவை ஊட்டுதல் முதலியன பிள்ளைகள் முன்னேற்றத்திற்கு ஏற்றவையாகும்.

5. தோட்ட வேலை, அட்டை வேலை, மூங்கில், பிரம்பு இவற்றைக் கொண்டு செய்யும் கைத்தொழில், நூல் நூற்றல், தையல் வேலை, பின்னல் வேலை முதலியவற்றில் பிள்ளைகள் பெறும்

அநுபவத்தை அன்றுடம் தத்தம் குறிப்புப் புத்தகத்தில் எழுதச் செய்தல் நல்ல முறையாகும்.

6. பாட நூலில் வரும் உரையாடல்களை நாடகமாக நடிக்கச் செய்தல், நாடக உருவில் எழுதச் செய்தல், நாடக உருவில் உள்ள வற்றைக் கதை வடிவில் எழுதச் செய்தல், கதையில் கூறப்படும் பாத்திரங்களாகத் தம்மை நினைந்து தம் சரித்திரம் கூறுதல் போலவும்-அதனைப் பிறர் கூறுதல் போலவும் சொல்லவும் எழுதவும் செய்தல் முதலியன மாணவர்க்குப் பேசும் திறனையும் எழுதும் திறமையையும் விரைவில் முன்னேறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

7. இன்ன இடங்களில் க, ச, த, ப மிகும் என்பதைப் பிள்ளைகளுக்கு உதாரணத்துடன் அறிவித்து, இந்த அறிவைப் பாடங்கள் மூலமாகப் பெருக்கிப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகளைப் பழக்குதல் நல்ல தொண்டாகும்.

8. ர, ற; ல, ள; ந, ண, ன—இவற்றின் வேறுபாடு விளங்கச் சொற்களில் இவற்றை வைத்து உச்சரிக்கப் பழக்குதலும், பொருளை அறிந்து கொள்ளுமாறு பழக்குதலும் மாணவரது தமிழ் அறிவிற்கு இன்றியமையாத அடிப்படையாகும்.

9. பாட்டுகளைச் சீர் பிரித்துப் பிழையின்றி வரிவரியாக எழுதப் பழக்குதல் மிகவும் நல்லது.

10. சுகாதாரம் முதலிய சிறப்புடைய செய்திகளின் விவரங்களைப் படங்கள், காட்சிகள், கதைகள் இவற்றின் மூலமாக நன்கு விளக்கி, அவற்றில் தகுந்த கவலை எடுத்துக்கொள்ளும்படி மாணவரைப் பழக்குதல் மாண்புடையதாகும்.

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	எனது வாசிப்பு அறை	1
2.	இரட்டைச் சொற்கள்	4
3.	கடிகாரம்	5
4.	பள்ளிக்கூட விளையாட்டுகள்	7
5.	எங்கள் தமிழ்நாடு	11
6.	சிறுவனைக் காத்த மாணவன்	13
7.	விலங்குகள்	15
8.	பறவைகள்	18
9.	ஆறு—ஏரி—குளம்	21
10.	மழை	25
11.	கடைத் தெரு—I	29
12.	கடைத் தெரு—II	32
13.	நங்கையும் நாயும்—I	35
14.	நங்கையும் நாயும்—II	38
15.	அனைவரும் ஆண்டவன் மக்கள்	40
16.	தெருவில் நடந்த நிகழ்ச்சி	43
17.	உலோகங்கள்	46
18.	நாணயங்கள்	49
19.	பால் பண்ணை	52
20.	பழமொழிகள்	55
21.	பாண்டியன் நெடுஞ்செழியன்	58
22.	கிராமத் திருவிழா	61
23.	கடிதங்கள்	64
24.	தபால்காரர்	66
25.	யார்?	69

26.	ஔவையார்	...	...	...	71
27	போலீஸ் சேவகர்	...	...	...	73
28.	செஞ்சிலுவைச் சங்கம்		...	...	76
29.	வஞ்சி மாநகரம்	...	...	...	80
30.	இரண்டு நண்பர்கள் ...		...	...	83

செய்யுள் பாடம்.

1.	சிட்டுக்குருவி	...	...	...	88
2.	வழிநடத்தல்	...	...	...	89
3.	கல்வி ...	...	...	...	90
4.	வெற்றி வேற்கை	...	...	...	92

படப் பயிற்சி 1

காலையில் கிராமக் காட்சி

படம் பார்த்து விஷயம் சொல்.



படப் பயிற்சி 2

காலையில் நகரக் காட்சி

படம் பார்த்து விஷயம் சொல்.



படப் பயிற்சி 3

குளத்துக் காட்சி

படம் பார்த்து விஷயம் சொல்.



படப் பயிற்சி 4

பேராசை கொண்ட நாய்

படம் பார்த்துக் கதை சொல்.



காவேரி வாசகம்

1. எனது வாசிப்பு அறை

புதிய சொற்கள் :— மாணவன்—வாசிப்பு—கடிகாரம்—அடுக்கினேன்—ஒழுங்காக—அட்டை — இவற்றை—முழுவதும்—பற்றி— கனவு — மகிழ்ச்சி — உண்டாகிறது — பெற்ரோர்.

நான் மூன்ரும் வகுப்பு மாணவன். என் பெயர் முருகன். நான் நேற்றுத்தான் இரண்டாம் வகுப்பில் தேறி



மூன்ரும் வகுப்புக்கு வந்தேன். என் தகப்பனுர் நேற்றே மூன்ரும் வகுப்புப் புத்தகங்கள் எல்லாம் வாங்கிவிட்டார். அவர் எனக்கு ஒரு சிறிய பீரோ, மேஜை, நாற்காலி,

கடிகாரம் இவற்றைக் கொடுத்திருக்கிறார்; நான் படிக்க ஓர் அறையும் விட்டிருக்கிறார்.

இதுதான் எனது வாசிப்பு அறை. நான் நேற்று மாலையே இதனைச் சுத்தம் செய்தேன்; பீரோவை நன்றாய்த் துடைத்தேன் ; அதில் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கினேன்; மேஜையையும் நாற்காலியையும் துடைத்தேன். நான் நேற்று இரவே புத்தகங்களுக்கு அட்டை போட்டேன் ; அட்டைமீது என் பெயர், வகுப்பு, பள்ளிக்கூடத்தின் பெயர் இவற்றை எழுதிவிட்டேன்.

நான் நேற்று இரவு முழுவதும் என் அறையைப் பற்றியும் சாமான்களைப் பற்றியுமே கனவு கண்டேன். என் அறையைப் பார்க்கப் பார்க்க எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. 'தம்பீ, நீ நாளும் நன்றாய்ப் படிக்க வேண்டும். அப்பொழுது தான் எங்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்' என்று என் பெற்றோர் நேற்று இரவே கூறினர். நான், 'அப்படியே செய்வேன்' என்றேன். நான் இன்று முதல் நன்றாய்ப் படிப்பேன்.

நீங்களும் நன்றாய்ப் படியுங்கள்.

கேள்விகள்

1. முருகன் எந்த வகுப்பு மாணவன்? நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

2. முருகனுக்குத் தகப்பனார் என்னென்ன கொடுத்தார்? அவற்றால் என்ன பயன்?

3. முருகன் அறையைப் பெற்ற அன்றே என்னென்ன செய்தான்?

4. அவன் பெற்றோர் அவனுக்கு யாது கூறினர்? அதற்கு அவன் என்ன பதில் சொன்னான்?

5. முருகன் உன்னை என்ன செய்யச் சொல்லுகிறான்? நீ அதனைச் செய்வாயா?

6. புத்தக அட்டைமீது ஏன் பெயர் முதலியவற்றை எழுத வேண்டும்?

பயிற்சி

1. இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துச் சொல்:-

இவற்றை, அட்டை, பார்க்கப் பார்க்க, மகிழ்ச்சி.

2. காலை × மாலை
கனவு × நனவு
நேற்று × இன்று } இவை எதிர்ப் பதங்கள். இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துச் சொல்.

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) நான்———இரவே———அட்டை———.

(2) அப்பொழுதுதான்——— ——— உண்டாகும்.

(3) நான்———வகுப்பு———.

4. புத்தகங்களை = புத்தகங்கள் + ஐ
வகுப்பில் = வகுப்பு + இல் } இப்படியே கீழ் வருவனவற்றைப் பிரி:—

அறையை, அறையில், நீங்களும், விட்டிருக்கிறார், கொடுத்திருக்கிறார்.

5. புத்தகம், பீரோ, மேஜை, நாற்காலி:—இவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு பொருளின் பெயர் ஆகும். ஆனால் அறை, பள்ளிக்கூடம், வீடு என்பன இடங்களின் பெயர்கள்.

(1) புத்தகம் — பொருளின் பெயர் (பொருட் பெயர்).

(2) அறை — இடத்தின் பெயர் (இடப் பெயர்).

இப்படியே இப்பாடத்தில் உள்ள பொருட்பெயர்களையும் இடப் பெயர்களையும் எடுத்து எழுது.

2. இரட்டைச் சொற்கள்

புதிய சொற்கள் :— கலகல—மளமள—சலசல—பளபள—தளதள—வெலவெல—படபட—தடதட—பச்சைப் பசேர்—வெள்ளை வெளேர் — கன்னங் கறேல் — செக்கச் செவேல்.

1. அவன் கலகல என்று சிரித்தான்.
2. மரங்கள் மளமள என்று முறிகின்றன.
3. இலைகள் சலசல என்று ஒலிக்கின்றன.
4. வாள் பளபள என்று மின்னுகிறது.
5. சோறு தளதள என்று கொதிக்கிறது.
6. அவன் வெலவெலத்து நின்றான்.
7. முருகன் படபட என்று பேசினான்.
8. பானைகள் தடதட என்று உருண்டன.
9. பயிர் பச்சைப் பசேர் என்று இருக்கிறது.
10. பால் வெள்ளை வெளேர் என்று இருக்கிறது.
11. காகம் கன்னங் கறேல் என்று இருக்கிறது.
12. மிளகாய் வற்றல் செக்கச் செவேல் என்று இருக்கிறது.

பயிற்சி

1. கலகல, தளதள, பளபள, மளமள—தனித்தனி வாக்கியத்தில் அமைத்துச் சொல்.

2. சலசல, படபட, தடதட, வெலவெல—தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. பச்சைப் பசேர், வெள்ளை வெளேர், கன்னங் கறேல், செக்கச் செவேல்—தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் கூறு; எழுது.

4. பள்ளிக்கூடம், வீடு, கடைத்தெரு—இவை என்ன பெயர்கள்?

5. ஆடு, புத்தகம், கிளி, இராமன்—இவை என்ன பெயர்கள்?

3. கடிகாரம்

புதிய சொற்கள்:— காட்டி—காலம்—பெறும்—முள்—நிமிஷம்—அறிவிப்பவை—கோடுகள்—அறுபது—எண்ணில்—அடுத்த—சுற்றிவரும்—மீண்டும்.

இது கடிகாரம் எனப்படும். இது காலத்தைக் காட்டுவதால் ‘காலம் காட்டி’ என்றும் பெயர் பெறும். இதில் உள்ள பன்னிரண்டு எண்கள் பன்னிரண்டு மணிகளைக் குறிப்பன. இதில் உள்ள சிறிய முள் மணியைக் காட்டுவது. பெரிய முள் நிமிஷத்தைக் காட்டுவது. ஒன்று என்னும் எண்ணிற்கும் இரண்டு என்னும் எண்ணிற்கும் நடுவில் ஐந்து சிறிய கோடுகள் இருக்கின்றன அல்லவா? அவையே நிமிஷத்தை அறிவிப்பவை. பன்னிரண்டு எண்களுக்கும் நடுவில் அறுபது கோடுகள் இருக்கின்றன. அதாவது ஒரு மணிக்கு அறுபது நிமிஷங்கள் என்பது பொருள்.



பெரிய முள் பன்னிரண்டு என்னும் எண்ணில் புறப்பட்டு ஒரு முறை சுற்றி மீண்டும் அதே எண்ணை அடையும் நேரம் ஒரு மணி எனப்படும். அப்பொழுது சிறிய முள் அடுத்த எண்ணை அடையும். அதாவது, சிறிய முள் இரண்டில் இருந்து மூன்றை அடைவதற்குள் பெரிய முள் பன்னிரண்டு எண்களையும் ஒரு முறை சுற்றிவரும்.

சிறிய முள் ஆறு என்னும் எண்ணிலும் பெரிய முள் பன்னிரண்டு என்னும் எண்ணிலும் இருக்கும் பொழுது 'காலை ஆறு மணி' எனப்படும். சிறிய முள் ஒரு முறை முழுவதும் சுற்றி மீண்டும் ஆறில் நிற்கும் போது 'மாலை ஆறு மணி' எனப்படும். இந்தப் பன்னிரண்டு மணி நேரமே 'பகல்' எனப்படும். மாலை ஆறு மணியில் இருந்து காலை ஆறு மணிவரை உள்ள பன்னிரண்டு மணி நேரம் 'இரவு' எனப்படும். பகலும் இரவும் சேர்ந்த இருபத்துநான்கு மணி நேரம் ஒரு நாள் எனப்படும்.

ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம். முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்.

கேள்விகள்

1. ஒரு நாள் என்பது எது?
2. கடிகாரம் ஒரு நாளை எப்படிக் காட்டுகிறது?
3. நிமிஷ முள் பன்னிரண்டிலும் சிறிய முள் மூன்றிலும் இருக்கும்போது மணி என்ன?

4. சிறிய முள் ஆறிலும் பெரிய முள் மூன்றிலும் இருந்தால் மணி என்ன ?

5. உன் பள்ளிக்கூடம் எத்தனை மணிக்கு ஆரம்பம் ஆகிறது? எத்தனை மணிக்கு முடிகிறது ?

பயிற்சி

1. பெரிய × சிறிய, காலை × மாலை, பகல் × இரவு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கடிகாரம் ஒன்றை அட்டையில் போட்டு, உனது வாசிப்பு அறையில் மாட்டி வை.

3. காலை, மாலை, நேரம், நாள், வாரம், மாதம், வருஷம்—இவை காலத்தை உணர்த்தும் பெயர்கள். ஆதலால் இவை **காலப் பெயர்கள்** எனப்படும்.

(1) பகல், இரவு, நடுப் பகல், நடு இரவு—இவை என்ன பெயர்கள் ?

(2) ஆவணி, ஜனவரி, தை, டிசம்பர்—இவை என்ன பெயர்கள் ?

4. பள்ளிக்கூட விளையாட்டுகள்

புதிய சொற்கள் :—தினந்தோறும்—தண்டால்—பார்—வசதி—அசைப்பதால்—இரத்த ஓட்டம் — அதிகப்படுகிறது — வியர்வை—உரம்—பெறுகிறது—அசுத்த — விஷயத்தை —உள்ளதாகவும்—இல்லாமலும்—நோய் — மாணவி — நொண்டி—பயிற்சி — நடைபெறும் — பங்கு — கொள்வோம்—பரிசு—பெறுவோம்.

நாங்கள் தினந்தோறும் மாலை 4-30 மணிக்கு மேல் 5-30 மணிவரை பள்ளிக்கூட மைதானத்தில் விளையாடு

கிரும். நாங்கள் கால் பந்து ஆடுவோம்; கைப்பந்து ஆடுவோம்; ஓடுவோம். பெரிய பிள்ளைகள் சிலர் தண்டால் எடுப்பார்கள்; சிலர் 'பார்' விளையாடுவார்கள்.



கால் பந்து ஆட்டத்தில் நாங்கள் நன்ருய் ஓட வசதி இருக்கிறது. கை கால்களை அசைப்பதாலும் ஓடுவதாலும் உடம்பில் வியர்வை உண்டாகிறது. அசுத்தமான இரத்தம் உடம்பிலிருந்து வியர்வையாக வெளி வருகிறது. அதனுல் இரத்தம் சுத்தம் அடைகிறது; இரத்த ஓட்டம் அதிகம் ஆகிறது; உடல் உரம் பெறுகிறது; உற்சாகம் உண்டாகிறது.

எங்கள் ஆசிரியர் இந்த விவரத்தை எங்களுக்குச் சொன்னுர். நாங்கள் அன்று முதல் மாலை நேரங்களில் இந்த விளையாட்டுகளை விளையாடுகிருேம். இதனுல் எங்கள் உடல் பலம் உள்ளதாகவும் நோய் இல்லாமலும் இருக்கிறது.

எங்கள் பள்ளிக்கூட மாணவிகள் ஊஞ்சல் ஆடுவார்கள் ; நொண்டி அடிப்பார்கள் ; கைகால்களை நீட்டுதல், மடக்குதல் முதலிய பயிற்சிகளைச் செய்வார்கள்; கயிற்றைச் சுற்றிக்கொண்டு துள்ளிக் குதிப்பார்கள்; கைப்பந்து ஆடுவார்கள்.



வருஷக் கடைசியில் பள்ளிக்கூடப் பந்தய விளையாட்டுகள் நடைபெறும். நாங்கள் பலவகை ஆட்டங்களில் பங்கு கொள்வோம் ; பரிசும் பெறுவோம்.

கேள்விகள்

1. பிள்ளைகள் எப்பொழுது விளையாடுவார்கள் ?
2. அவர்கள் என்னென்ன விளையாட்டுகள் விளையாடுவார்கள்?
3. பெண்கள் விளையாடும் விளையாட்டுகள் எவை ?
4. விளையாட்டு உடம்புக்கு நல்லது.—எப்படி ?
5. நீ, பள்ளிக்கூடப் பந்தய விளையாட்டைப்பற்றி யாது அறிவாய் ?

6. நீ இரண்டாம் வகுப்பில் பரிசு பெற்றது உண்டா? எந்த விளையாட்டில் பரிசு பெற்ருய்?

பயிற்சி

1. பரிசு, பந்தயம், நடைபெறும், பங்கு.—இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. 'இது முதல் இது வரை'—'முதல்...வரை' என்பதை உன் சொந்த வாக்கியத்தில் அமைத்துச் சொல்.

3. மாணவன்—ஆண்
மாணவி —பெண்
} இப்படி வருகின்ற ஆண்—பெண் பெயர்களில் நான்கு கூறுக.

4. முதல் × கடைசி
அதிகம் × குறைவு
உள்ளது × இல்லது
சுத்தம் × அசுத்தம்
} இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு; எழுது.

5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை எழுது:—

(1) நாங்கள் மாலை நான்கரை மணி——ஐந்தரை மணி—— விளையாடுவோம்.

(2) அதனுல் இரத்தம்——அடைகிறது.

(3) நாங்கள் பலவகை——பங்கு——.

6. மனிதன்—பொருள் பெயர். ஆனுல் அவனுடைய தலை, கை, கால், விரல் முதலியன பொருள் பெயர்கள் ஆகா. அவை **சினை** (அவயவம்) எனப்படும். ஆதலால், அவை **சினைப் பெயர்** எனப்படும்.

மரம்—பொருள் பெயர்.

கிளை, மிலாறு, இலை, காய்—சினைப் பெயர்.

யானை—பொருள் பெயர்.

துதிக்கை, வால், கால், காது, தலை—சினைப் பெயர்.

எங்கள் தமிழ் நாடு



5. எங்கள் தமிழ்நாடு

1. திருப்பதிக்குத் தென்திசையில் தமிழ்வளரும் நாடு;
திருக்குமரி முனைவடக்கே தமிழ்வளரும் நாடு;
2. வங்கக்கடல் மேல்திசையில் தமிழ்வளரும் நாடு;
துங்கமலை யாளத்திற்குக் கிழக்கில்வளர் நாடு;
3. இந்நான்கு எல்லைகட்குள் இருப்பதெங்கள் நாடு.
இந்நாட்டைத் 'தமிழ்நாடு, எம்நாடு' என்போம்.
4. தமிழ்நாட்டில் இருப்பவர்கள் தமிழர்களே ஆவார்.
தமிழ்நாட்டார் பேசுவதும் தமிழ்மொழியே ஆகும்.
5. எங்கள்தமிழ் இனியதமிழ் என்றுமுள்ள தமிழே.
கங்கையணி சிவபெருமான் கனிந்துரைத்த தமிழே.
6. சேரசோழ பாண்டியர்கள் செழிக்கவைத்த தமிழே.
ஆர அமரப் புலவர்களும் ஆராய்ந்த தமிழே.

—வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.

கேள்விகள்

1. தமிழ் நாட்டின் நான்கு எல்லைகள் எவை?
2. நீ எந்த நாட்டான்? எந்த மொழி உன் தாய் மொழி?
3. தமிழை வளர்த்த அரசர்கள் யார்?
4. புலவர்—யார்?

பயிற்சி

1. திருப்பதி, கடல், குமரி முனை, தமிழ் நாடு—என்ன பெயர்கள்?

2. தமிழர், சிவ பெருமான், புலவர்—என்ன பெயர்கள்?

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) தமிழ்நாடு திருப்பதிக்குத் ——— இருக்கிறது.
(2) தமிழ்நாடு வங்கக் ——— ——— இருக்கிறது.
(3) சேர —— பாண்டியர் —— வளர்த்தார்கள்.
(4) எங்கள் மொழி ——— .

4. சிவ பெருமான், தமிழ் நாடு, புலவர்கள், மலையாள நாடு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

5. தமிழ் நாட்டின் படம் போட்டு, எல்லைகளைக் குறிப்பிடு. அப் படத்தை உன் வாசிப்பு அறையில் மாட்டி வை.

6. வேறு சொல் கூறு:—மகிழ்ச்சி, முறை, மாலை, உடம்பு, நாள், திசை.

6. சிறுவனைக் காத்த மாணவன்

படம் பார்த்து விஷயம் எழுது.



கேள்விகள்

1. குளத்தின் உபயோகம் என்ன ?

2. சிறுவன் குளத்தில் தவறி விழக் காரணம் என்ன?

3. மாணவன் அவனை எப்படி மீட்டான் ?

4. சிறுவன் குளத்தில் விழுந்தவுடன் தாய் முகம் எப்படி இருந்திருக்கும்? சிறுவன் காப்பாற்றப்பட்டவுடன் அவன் முகம் எப்படி இருந்திருக்கும்? என்ன காரணம்?

5. நீ இப்பாடத்தால் என்ன அறிகிறாய் ?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை எழுது :—

(1) —— படிகள் உண்டு.

(2) இந்தக் குளத்தில் —— இல்லை.

(3) பையனுக்கு —— தெரியும்.

(4) சிறுவன் —— தவறி ——.

2. துவைத்தல், நீராடுதல், நீந்துதல்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. காலையில் சிறுவன் குளத்தில் விழுந்தான். சிறுவன் மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறான். தகப்பனார் பகலில் கடைக்குப் போகிறார்.—இவற்றுள் வந்துள்ள பொருள் பெயர், இடப் பெயர், காலப் பெயர்கள் எவை ?

4. நாய் வாலை ஆட்டுகிறது.
தாய் கையை நீட்டுகிறாள்.
இலைகள் அசைகின்றன.
} இவற்றில் உள்ள பொருள் பெயர்கள் எவை ?

5. வெண்மை, கருமை, வெள்ளை,
கறுப்பு, பசுமை, சிவப்பு,
இனிப்பு, புளிப்பு, கசப்பு.
} இவை **குணப் பெயர்கள்** எனப்படும்.

7. விலங்குகள்

புதிய சொற்கள் :—வீட்டை—காவல்—காக்கும் — நம்மிடம்—உதவியை—மறவாது— ஆபத்தில் — பழகியவர் — கண்டால்—துணை—சாதுவானது—பயன்படும் — காய்ச்சி—மோர்—தயிர்—வெண்ணெய் — நெய் — கடைந்தால்—நேசிக்கிறோம் — பூசிக்கிறோம் — இழுக்கும்—சந்தை—ஏற்றி—இல்லாவிடில்—நடைபெறாது.

இது நாயின் படம். நாய் வீட்டைக் காவல் காக்கும். நாய் நம்மிடம் அன்பாய் இருக்கும். இது நாம் செய்யும் உதவியை மறவாது. இது நம்மை ஆபத்தில் காக்கும். இது பழகியவரைக் கண்டால் வாலை ஆட்டும். நாயே நல்ல துணை.



பசு மிகவும் சாதுவானது. இதன் பாலை விரும்பாதவர் உண்டா ? இதன் பால் உடம்புக்கு நல்லது. அது மருந்துக்கும் பயன் படும். பாலைக் காய்ச்சி, சிறிது மோரை ஊற்றினால், தயிராகும். தயிரைக் கடைந்தால் மோர் ஆகும். மோரில் இருந்து வெண்ணெய் வரும். வெண்ணெயைக் காய்ச்ச நெய் ஆகும்.



இவை எல்லாம் நமக்குப் பயன்படுபவை. ஆதலால்,

இவற்றைத் தரும் பசுவை நாம் நேசிக்கிறோம்; பூசிக்கிறோம்.

எருது பலம் உள்ளது. இதைக் காளை மாடு என்றும் சொல்லுவார்கள். எருது ஏர் உழும். எருது வண்டி இழுக்கும். மொட்டை வண்டி, கூண்டு வண்டி இவற்றை மாடுகளே இழுத்துச் செல்லும். மாட்டு வண்டிகள் சந்தை கூடும் இடத்துக்குச் சாமான்களை ஏற்றிச் செல்லும். மாடுகள் இல்லாவிடில், கிராமங்களில் எந்த வேலையும் நடைபெறாது. மாடு பொதி சுமத்தலும் உண்டு.



எருமைப் பால் தடிப்பானது. எருமை எதனையும் மெதுவாகவே செய்யும். இதன் கொம்புகள் நீளமானவை. எருமையும் எருதைப் போல ஏர் உழும்; வண்டி இழுக்கும். எருமையின் நிறம் என்ன?



கேள்விகள்

1. நாயின் குணம் என்ன?
2. பசுவினால் நாம் அடைவன எவை?
3. எருது, எருமை—இவை எப்படிப் பயன்படுகின்றன?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) பசு —— சாதுவானது.

(2) தயிரைக் —— மோர் ——.

(3) எருது —— உள்ளது.

(4) எருமைப் பால் ——.

2. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல்.

3. காக்கும், காவல், தடிப்பானது, சாதுவானது—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. சாதுவான விலங்குகள் இரண்டின் பெயர்களைக் கூறு.

5. நாய்க்கும் பூனைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

6. இந்த நான்கு விலங்குகளில் நீ விரும்புவது எது? ஏன்? காரணம் கூறு.

7. இப்பாடத்தில் வந்துள்ள பொருட்பெயர்களை எழுது.

8. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—

(1) எருமைப் பால் —— (மென்மையானது, தடிப்பானது).

(2) பசுவின் பால் —— (தடிப்பானது, மென்மையானது).

(3) நாய் பசுவைவிட —— (பெரியது, சிறியது).

(4) குதிரை எருதைவிட —— வண்டியை இழுக்கும் (மெதுவாக, வேகமாக).

(5) பசு எருமையைவிட —— (சோம்பல் உடையது, சுறுசுறுப்பு உடையது).

9. நீ இதுவரை கற்ற பெயர்ச்சொற்களைக் கீழ் உள்ள கட்டங்களில் எழுதிக் காட்டு:—

எண்	பொருட் பெயர்	இடப் பெயர்	காலப் பெயர்	சினைப் பெயர்	குணப் பெயர்
1					
2					
3					
4					
5					
6					

8. பறவைகள்

புதிய சொற்கள் :—வளரும்—இடும்—அடைகாக்கும்—பொறிக்கும்—சீய்க்கும்—தானியம்—பூச்சி—புழு—மருந்து—வளராத—மரக்கிளை—வாழும்—எதை—கூடியே—இனம்—இல்லாமல்—தின்னுது—அழகிய—நீந்தும்—நடுவில்—தோல்—உதவியால்—நீண்டு—தட்டையாக—அழகான—தோகை—விரித்து—விரும்பாதவர்—உண்டா.

கோழி வீட்டில் வளரும் பறவை. பெட்டைக் கோழி முட்டை இடும். ஆண் கோழி சேவல் எனப் படும். தாய்க் கோழி முட்டைமீது உட்கார்ந்து அடை காக்கும்; குஞ்சு பொறிக்கும். கோழி குப்பையைச்

சேய்க்கும் ; தானியங்களையும் பூச்சி புழுக்களையும் தின்னும். சிலர் கோழி முட்டையைத் தின்பார்கள். அது மருந்துக்கும் உதவும்.





காகம் வீட்டில் வளராத பறவை. இது மரக் கிளைகளில் கூடு கட்டி வாழும். காகங்கள் கூட்டம் கூட்டமாக வாழும் ; எதைத் தின்னும் போதும் கூடியே தின்னும். காகம் தன் இனம் இல்லாமல் தின்னாது. இது தினமும் நீரில் குளிக்கும். இது அழுகிய பொருள்களைத் தின்னும். இதன் நிறம் என்ன ?

வாத்து வீட்டில் வளரும் பறவை. இது தண்ணீரில் நன்றாய் நீந்தும். இதன் கால் விரல்களுக்கு நடுவில் தோல் உண்டு. இது அத்தோலின் உதவியால் நீந்தும். இதன் மூக்கு நீண்டு தட்டையாக இருக்கும். இதன் முட்டை கோழி முட்டையை விடப் பெரியது. சிலர் வாத்து முட்டையைத் தின்பார்கள். அது மருந்துக்கும் உதவும்.



மயில் அழகான பறவை. அதன் தோகை நீண்டு

இருப்பதைப் பார். மயில் மழையை விரும்பும். அது அப்போது தன் தோகையை விரித்து ஆடும். மயில் இறகு மருந்துக்கு உதவும். மயில் தோகையால் விசிறி செய்யலாம். மயிலை விரும்பாதவர் உண்டா?

கேள்விகள்

1. கோழி எப்படிக் குஞ்சு பொறிக்கும்?
2. கோழி எவற்றைத் தின்னும்?
3. காகத்தினிடம் உள்ள நல்ல குணம் எது? நல்ல பழக்கம் எது?
4. வாத்து எதன் உதவியால் தண்ணீரில் நீந்துகிறது?
5. மயிலைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) மயில் —— மருந்துக்கு —— .

(2) வாத்து —— கோழி —— விடப் பெரியது.

(3) காகம் —— பொருளைத் —— .

(4) கோழி அடை ——க் குஞ்சு —— .

2. நீ இப் பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றை எழுது.

3. தின்னும் × தின்னாது
வளரும் × வளராது } இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

4. இந்த நான்கு பறவைகளில் நீ விரும்பும் பறவை எது ?
5. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்துப் படி.

(1) மயில் மிகவும் —— பறவை (அழகான, விகாரமான).
(2) காகம் மயிலைவிட —— (பெரியது, சிறியது).
(3) காகம் எப்பொழுதும் —— தின்னும் (தனியே, கூடியே).

6. மயில்—ஒரு பறவையின் பெயர்.

மயில்கள்—ஒன்றுக்கு மேற்பட்ட பறவைகளின் பெயர்.

ஒன்றன் பெயர் **ஒருமை எண்** எனப்படும்; ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் பெயர் **பன்மை எண்** எனப்படும்.

இப் பாடத்தில் வந்துள்ள ஒருமை—பன்மைப் பெயர்களைச் சொல்.

---

9. ஆறு - ஏரி - குளம்

புதிய சொற்கள் :—ஆற்றை — மலை — பெய்யும் — திரண்டு—ஆறாக—ஆற்றில்—வெள்ளம்—கரைபுரண்டு—கால்வாய்—வெட்டுவார்கள் — மூலம் — வயல்களுக்கு—பாயும்—தேக்கி—நீளம்—அகலம்—பாய்ச்சல்—குளத்துநீர் — சுத்தமாக—குளிப்பாட்ட — குடிக்க—ஆதலால்—இவ்வாறு—நீர்நிலைகள்—இல்லாவிடில்—பயிர் - உயிர்வாழ-காரணமாக—வாழ்த்துவோம்.

தம்பீ, நீ ஆற்றைப் பார்த்திருக்கிறாயா? இதுதான் ஆறு. மலைமீது பெய்யும் மழைநீர் திரண்டு ஆறாக வரும். ஆற்றில் நீர் அதிகமாக வருவது வெள்ளம் எனப்படும். அப்போது தண்ணீர் கரை புரண்டு ஓடும். ஆற்றில் பல கால்வாய்கள் வெட்டுவார்கள்; கால்வாய்கள் மூலம்

ஆற்று நீர் வயல்களுக்குப் பாயும். அந்த வயல்கள் ‘ ஆற்றுப் பாய்ச்சல் உள்ள நிலங்கள் ’ எனப்படும்.

மழை நீரைத் தேக்கி வைத்திருப்பது ஏரி என்று சொல்லப்படும். இது அதிக நீளமும் அதிக அகலமும் அதிக ஆழமும் உள்ளது. ஏரி நீர் கால்வாய்கள்மூலம் வயல்களுக்குப் பாயும். அந்த வயல்கள் ‘ ஏரிப் பாய்ச்சல் உள்ள நிலங்கள் ’ எனப்படும்.

இது குளம். ஒவ்வொரு கிராமத்திலும் குளம் இருக்கும். கிராமங்களில் இரண்டு-மூன்று குளங்களும்

இருக்கும். மனிதர்கள் குடிக்கவும் குளிக்கவும் குளங்கள் பயன்படும். ஆடு மாடுகளைக் குளிப்பாட்டத் தனிக் குளங்கள் இருக்கும். குளத்து நீர் சுத்தமாக இருந்தால் நோய்கள் உண்டாகா. ஆதலால், நாம் குளத்து நீரைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மழை நீர் நிரம்பியுள்ள இடங்கள் 'நீர் நிலைகள்' எனப்படும். மழை நீர் இல்லாவிடில் பயிர் இல்லை. பயிர் இல்லாவிடில் உணவு இல்லை. உணவு இல்லாவிடில் உயிர் இல்லை; நாம் இல்லை. ஆகவே, நாம் உயிர் வாழக் காரணமாக இருப்பது மழை. ஆதலால், நாம் மழையை வாழ்த்துவோம்.

கேள்விகள்

1. ஆற்றில் நீர் வரக் காரணம் என்ன?
2. நமக்கு ஆற்று நீர் எப்படி உபயோகப்படுகிறது?
3. நமக்கு ஏரி நீர் எப்படிப் பயன்படுகிறது?
4. நமக்குக் குளத்து நீரால் என்ன உபயோகம்?
5. 'நீர் நிலைகள்' என்பன யாவை?
6. நாம் மழையை ஏன் வாழ்த்த வேண்டும்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

ஒவ்வொரு கிராமத்திலும்———இருக்கும்.
நாம் உயிர்———க் காரணமாக———மழை.

2. நீர் நிலை, கால்வாய், குளம், ஏரி—இவற்றைத் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. ஆறு, குளம், ஏரி—இடப்பெயர்கள். இம்மாதிரி வந்துள்ள வேறு பெயர்களைக் கூறு.

4. இப் பாடத்தில் வந்துள்ள ஒருமை—பன்மைப் பெயர்களைக் கூறு.

எண்	ஒருமை	பன்மை
1		
2		
3		
4		
5		
6		

5. நான் பாடம் படித்தேன். நான் விளையாடினேன்—இவற்றுள் படித்தேன், விளையாடினேன் என்னும் சொற்கள் நான் செய்த வினையை (தொழிலை)த் தெரிவிப்பன. இப்படி வினையைத் தெரிவிக்கும் சொல் வினைச் சொல் எனப்படும். படித்தேன், விளையாடினேன்—வினைச் சொற்கள். இப்படிப்பட்ட வினைச் சொற்களை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுது.

10. மழை

1. சோழனது சீமையிலே சொரிந்ததே நல்லமழை.
2. நல்லமழை பெய்ததனுல் நாடு செழித்ததப்பா.
3. பூமி குளிர்ந்ததுவே; பொய்கைகள் நிரம்பினவே.
4. ஏரிகள் நிரம்பினவே; எதிர்த்ததே ஏகவெள்ளம்.
5. ஆறுகள் நிரம்பினவே; அணைகள் அழிந்தனவே.
6. குளங்கள் நிரம்பினவே; குதித்தன மீன்களெலாம்.
7. தருக்கள் தளிர்த்தனவே; தாமரைகள் பூத்தனவே.
8. வயல்கள் நிரம்பினவே; வாய்க்கால் நிரம்பினவே.
9. செடிகள் கொடிகள்எலாம் செழிப்பாய்த் தளிர்த்
[தனவே.
10. செந்நெல் விளைந்ததுவே; தேசம் செழித்ததுவே.
11. பயிர்கள் விளைந்தனவே; பலனைக் கொடுத்தனவே.
12. வயலைஉழும் மக்களெலாம் வாழ்த்திமழைப் பொங்க
[லிட்டார்.

—அல்லி அரசி மாலை

தரு - மரம்.

கேள்விகள்

1. நல்ல மழை பெய்ததால் சோழனது நாட்டில் உண்டான மாறுதல்கள் எவை ?

2. மழை இல்லாவிட்டால் எவை எவை எப்படி எப்படி இருக்கும் ?

3. மழையைப்பற்றி உன் கருத்து என்ன ?

4. உன் தெருவில் மழை பெய்கையில் நீ கண்ட காட்சிகளைப் பற்றிச் சொல்.

5. நீ உன் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது மழை பெய்தது; நீ அப்போது கண்ட அல்லது அநுபவித்த விஷயங்களைச் சொல்.

பயிற்சி

1. இப்பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை? கட்டம் போட்டுக் காட்டு.

எண்	பெயர்ச் சொல்	வினைச் சொல்
1		
2		
3		
4		
5		
6		

2. இரண்டு இரண்டாகப் பொருத்திக் காட்டு :—

நாடு	நிரம்பின
குளங்கள்	பெய்தது
செடிகள்	குளிர்ந்தது
மழை	செழித்தது
பூமி	தளிர்த்தன

3. இப்பாடத்தில் உள்ள இடப்பெயர்களை எழுது.
4. தடித்த சொற்கள் என்ன என்ன சொற்கள் ?

(1) அவன் **ஓடு** மாற்றுகிறான் ; நீ வேகமாக **ஓடு**.
(2) மலையில் மேய்வது **ஆடு** ; நீ அவனுடன் சேர்ந்து **ஆடு**.
(3) அவன் பட்ட **பாடு** அதிகம் ; நீ பாட்டுப் **பாடு**.
(4) இது வீட்டில் உள்ள **அறை** ; நீ அவனை **அறை**.

படப் பயிற்சி



வீணை	புல்லாங்குழல்
பாட்டு	மிருதங்கம்

மேளம்	ஒற்று
தவுல்	தாளம்

வாசிக்கிறாள் ஊதுகிறான்
ஊதுகிறாள் போடுகிறான்

பாடுகிறாள் வாசிக்கிறான்
அடிக்கிறாள் அடிக்கிறான்



I. கோடிட்ட இடங்களில், மேல் உள்ள தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) வீணை ——.	(1) தவுல். ——.
(2) பாட்டுப் ——.	(2) தாளம் ——.
(3) மிருதங்கம் ——.	(3) ஒற்று ——.
(4) புல்லாங்குழல் ——.	(4) மேளம் ——.

II. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) —— வாசிக்கிறாள்.	(1) —— அடிக்கிறான்.
(2) —— ஊதுகிறான்.	(2) —— ஊதுகிறாள்.
(3) —— அடிக்கிறாள்.	(3) —— போடுகிறான்.

III. 1. புல்லாங்குழல், தவுல், மேளம்—எவற்றால் செய்யப்பட்டவை?

2. தாளம் எதனால் ஆனது?

குறிப்பு:—இவ்விவரங்களை ஆசிரியர் விளக்கமாகப் போதித்தல் வேண்டும்.

11. கடைத் தெரு—I

புதிய சொற்கள் :—அறிவாயா—அறிவேன்—அத்தி—மாதுளம் பழம் — பாத்திரம் — எவற்ருல்—ஜவுளி—சீட்டி—துப் பட்டி—பொம்மை—இரா.

அண்ணன் :—தம்பீ, இதுதான் பழக்கடை. நீ இதில் உள்ள பழங்களின் பெயர்களை அறிவாயா?

தம்பி :—அறிவேன். வாழைப்பழம், மாம்பழம், மாதுளம்பழம், அத்திப்பழம், ஆரஞ்சுப்பழம், திரா க்ஷைப்பழம்.



அண்ணன் :—தம்பீ, நீ அறிவுள்ளவன். இது என்ன கடை?

தம்பி :—இது பாத்திரக் கடை. இதில் குடம், தவலை, அண்டா, குத்துவிளக்கு, கூஜா, கரண்டி, இட் டலிப்பானை, தட்டு முதலியவை இருக்கின்றன. ஆனல், இவை எவற்ருல் செய்யப்பட்டவை என்பது தெரியாது.

அண்ணன் :—சில பாத்திரங்கள் பித்தளை என்னும் உலோகத்தாலும், சில செம்பு என்னும் உலோகத்தாலும், வேறு சில ஈயம் என்னும் உலோகத்தாலும் செய்யப்பட்டவை.

தம்பி :—வெண்மையாக இருக்கின்ற பாத்திரங்கள் எதனுல் செய்யப்பட்டவை?

அண்ணன் :—அவற்றுள் சில அலுமினியம் என்னும் உலோகத்தால் ஆனவை; சில ஜெர்மன் வெள்ளி என்னும் உலோகத்தால் ஆனவை. வேறு சில, பீங்கான் என்னும் ஒருவகைக் களிமண்ணுல் செய்யப்பட்டவை.

தம்பி :—அடுத்த கடை துணிக்கடை.

அண்ணன் :—இது ஜவுளிக்கடை எனப்படும்.



இதில் வேட்டி, துண்டு, மேலாடை, புடவை, சீட்டித் துணிகள், சட்டைத் துணிகள், துப்பட்டி முதலியன இருக்கும். இவை பருத்தி ஆடைகள்; இங்குப் பட்டு ஆடைகளும் உண்டு. இதற்கு அடுத்த கடை மரக்கடை.

தம்பி:—மரப் பொம்மைகள் இல்லையே?

அண்ணன்:—மரக்கடையில் மரப் பொம்மைகள் இரா. அவை பொம்மைக் கடையில் இருக்கும். இந்தக்

கடையில் மரத்தால் ஆகிய மேஜை, நாற்காலி, பீரோ, கட்டில், தொட்டில், ஊஞ்சல் பலகை, சாய்வு நாற்காலி, பெட்டி முதலியன இருக்கின்றன.

கேள்விகள்

1. பழக்கடையில் இருக்கும் பழங்கள் எவை? (தம்பியின் பதில்)
2. பாத்திரங்கள் எவற்றால் செய்யப்படுகின்றன?
3. ஜவுளிக்கடையில் இருப்பவை எவை?
4. மரக்கடையில் இருக்கும் சாமான்கள் எவை?
5. கடைத்தெரு—அர்த்தம் என்ன?

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள உலோகங்களின் பெயர்களை எழுது.

2. அண்டா, டம்ளர், கூஜா, சீட்டித்துணி, சாய்வு நாற்காலி —இவற்றின் உபயோகம் என்ன?

3. கரண்டி, துண்டு, மணை, மாம்பழம்—இவை எங்கெந்தக் கடையில் கிடைக்கும்?

4. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—

பித்தளை	பீரோ
பட்டு	தோல்
மரம்	குடம்
பழம்	புடவை

5. இப்பாடத்தில் வந்துள்ள பொருட்பெயர், இடப்பெயர், குணப்பெயர்களை எழுது.

6. இப்பாடத்தில் உள்ள ஒருமை, பன்மைப் பெயர்களைக் கூறு.

7. இப்பாடத்தில் உள்ள பெயர்ச்சொல், வினைச்சொற்களைக் கட்டம் போட்டு எழுது.

8. உனக்குத் தெரிந்த வேறு நான்கு உலோகங்களின் பெயர்களைக் கூறு.

12. கடைத் தெரு—II

புதிய சொற்கள் :—பிஸ்கெட்—பெப்பர்மின்ட்—சோப்பு—புட்டிப்பால்—மா—பின்னல்—பென்ஸில்—நாடுகள் — நகை —சிற்றுண்டிச்சாலை — காப்பி—தேயிலை—மோர்—ஓமப் பொடி—முறுக்கு—ஜிலேபி—பால் கோவா — காரம் — புதியவன்—இதுவரை—முறையாக—வியப்பு - அல்லவா —விளைக்கின்றன.

தம்பி :—அண்ணா, இது என்ன கடை ? இதில் பல வகைப் பொருள்கள் உள்ளனவே !

அண்ணன் :—இது பலபொருள் கடை. இதனில் பிஸ்கெட், பெப்பர்மின்ட், சோப்பு, குழந்தைகள் சாப்பிடும் புட்டிப்பால், முகத்தில் அடித்துக்கொள்ளும் மா,



பின்னலின் அடியில் கட்டும் பட்டுத் துண்டுகள், பென்ஸில், பேனா, மைக்கூடு, கற்பலகை முதலிய பல பொருள்கள் இருக்கின்றன. இவற்றுள் பல வெளிநாடுகளில் இருந்து இங்கே கொண்டுவரப் படுகின்றன.

தம்பி :—அண்ணா, அதோ, நகைக் கடையைப் பார்.

அண்ணன் :—ஆம். அதுவே நகைக் கடை. அதில் உள்ள பொருள்கள் பொன்னாலும் வெள்ளியாலும் ஆனவை. பொன் சங்கிலி, வளையல், காப்பு, ஒட்டியாணம், கம்மல், கடுக்கன், கடகம், மோதிரம் இவற்றைப் பார். வெள்ளிப் பாத்திரங்கள், கால் கொலுசு, காப்பு, கூஜா, விளக்கு இவற்றையும் கவனி.

தம்பி :—அண்ணா, அடுத்தது மிட்டாய்க் கடையா?

அண்ணன் :—இல்லை. வெளியில் இருப்பது மிட்டாய்க் கடை; உள்ளே சிற்றுண்டிச் சாலை இருக்கிறது.

தம்பி :—அதில் என்னென்ன விற்கிறார்கள்?

அண்ணன் :—அதில் காப்பி, தேயிலை, மோர் முதலிய குடிவகை உண்டு; இட்டலி, ஓமப்பொடி, வடை, முறுக்கு, தோசை முதலிய காரப் பொருள்களும் உண்டு; லட்டு, ஜிலேபி, பால்கோவா முதலிய இனிப்புப் பொருள்களும் உண்டு.

நீ இந்த ஊருக்குப் புதியவன்; நீ இதுவரை இருந்த நமது கிராமத்தில் சிற்றுண்டிச்சாலை இல்லை. மேலும், இங்குள்ள கடைத்தெருவும் அங்கு இல்லை. நீ இவற்றை

எல்லாம் இன்றுதான் முதல் முறையாகப் பார்க்கிறாய். இவை எல்லாம் உனக்கு வியப்பை உண்டாக்குகின்றன அல்லவா?

தம்பி :—ஆம், ஆம். இவை வியப்பையே விளைவிக்கின்றன.

கேள்விகள்

1. 'பல பொருள் கடை' என்பது எது? அதில் உள்ளவை எவை?

2. அதில் உள்ள (பாடத்தில் சொல்லப்படாத) வேறு பொருள்களைச் சொல்.

3. நகைக் கடையில் உள்ள நகைகள் எவை?

4. சிற்றுண்டிச் சாலையில் செய்யப்படுவன எவை? உனக்குத் தெரிந்த பெயர்களைச் சொல்.

பயிற்சி

1. உன் வீட்டில் செய்யப்படும் சிற்றுண்டிப் பொருள்கள் எவை?

2. கம்மல், சீப்பு, கண்ணாடி, சங்கிலி, ஜிலேபி, தவலை, போர்வை—இவை எந்தெந்தக் கடையில் கிடைக்கும்?

3. சிற்றுண்டி, காரப்பொருள், இனிப்புப்பொருள், வியப்பை —ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துச் சொல்.

4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :-

(1) பொன் வளையல்—— —— கிடைக்கும்.

(2) தோசை———சாலையில்———.

(3) சோப்பு———கடையில் கிடைக்கும்.

5. இப்பாடத்தில் வந்துள்ள பொருட் பெயர்களை எழுது; இடப் பெயர்களையும் எழுது.

6. உள்ளே × வெளியே
முதல் × கடைசி
புதியவன் × பழையவன்
} இவை எதிர்ப் பதங்கள். இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

7. (1) காப்பு, நகை, இட்டலி, ஜிலேபி—பன்மை எண் கூறு.
(2) வளையல்கள், போண்டாக்கள், துண்டுகள்—ஒருமை எண் கூறு.

8. இப்பாடத்தில் உள்ள வினைச் சொற்களை எழுது.

---

13. நங்கையும் நாயும்—I

புதிய சொற்கள் :—மாணவி—விஷமம்—வல்லவள் — யாவரையும்—நவராத்திரிக் கொலு—மங்கை—உடுத்திருந்தாள்—கோபம்—அலறினாள்—விளையாட்டாக—அழுதாள்.

நங்கை மூன்றாம் வகுப்பு மாணவி. அவள் நன்றாகப் பாடம் படிப்பவள்; ஆனால் விஷமம் செய்வதிலும்

வல்லவள். அவள் எல்லோரையும் அடிப்பாள்; பூனை, நாய், பசு, எருது முதலிய விலங்குகளையும் அடிப்பாள்.

அவள் ஒருநாள் மங்கை என்னும் மாணவி வீட்டுக்குப் போனாள். மங்கையும் மூன்றாம் வகுப்பு மாணவி. அவள் வீட்டில் ஒரு நாய் இருந்தது. நங்கை வெளியே வரும்போது அந்த நாயை அடித்துவிட்டு ஓடிவந்தாள்.

அடுத்த மாதம் மங்கை வீட்டில் நவராத்திரிக் கொலு வைக்கப்பட்டு இருந்தது. நங்கை அதனைப் பார்க்கச் சென்றாள். அவள் பட்டுப் பாவாடையும் பட்டுச் சட்டையும் உடுத்திருந்தாள். தலையில் மல்லிகைப்பூ இருந்தது.

மங்கை வீட்டு நாய் அவளைப் பார்த்துவிட்டது. அதற்குக் கோபம் உண்டானது. அது அவள்மீது பாய்ந்தது; அவளுடைய உடைகளைக் கிழித்தது. நங்கை 'ஓ' என்று அலறினாள். நாய் அவளை விடவில்லை. கடைசியில் மங்கை அங்கு ஓடிவந்தாள். நாய், அவளைக் கண்டதும் ஓடிவிட்டது.

மங்கை, “ நங்கையே, நீ என் நாயை முன் அடித்த துண்டா ?” என்ருள். நங்கை, “ ஆம். ஒருமுறை விளையாட்டாக அடித்தேன். அது வினை ஆயிற்று. நான் இனி யாரையும் அடிக்கமாட்டேன் ” என்று சொல்லிக் கொண்டே அழுதாள்.

‘ விளையாட்டு வினையாகும்.’

கேள்விகள்

1. நங்கையின் குணம் என்ன ?
2. நாய் ஏன் அவளைத் துன்புறுத்தியது ?
3. அவள் கற்றுக்கொண்ட பாடம் யாது ?

பயிற்சி

1. விளையாட்டாக, கொலு, அலறினுள்—உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

2. நவராத்திரிக் கொலு-இதைப்பற்றித் தெரிந்ததைச் சொல்.

3. மாணவன்—படிப்பவன்
மாணவி—படிப்பவள்
தந்தை × தாய்
மாணவன் × மாணவி
} இப்படி வரும் ஆண்பால் பெயர்களையும் பெண்பால் பெயர்களையும் கூறு.

4. இந்தப் பாடத்துச் செய்தி ‘ கதை ’ ஆகுமா ?—‘ சம்பவம் ’ ஆகுமா ? ஏன் ?

5. இப்பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்களை எழுது.

6. இப்பாடத்தில் உள்ள ஒருமை—பன்மைகளை எடுத்து எழுது.

7. இப்பாடத்தில் உள்ள வினைச்சொற்களை எழுது.

8. கந்தன் வந்தான்.—இது இரண்டு சொற்களைக் கொண்ட தொடர். (தொடர்—ஒன்றை ஒன்று தொடர்தல்).

கந்தன் பார்த்து வந்தான்—இது மூன்று சொற்களைக் கொண்ட தொடர்.

கந்தன் பார்த்து நடந்து வந்தான்—இது நான்கு சொற்களைக் கொண்ட தொடர்.

இப்படிச் சொற்களால் ஆகும் தொடர் 'சொல் தொடர்' எனப் படும்.

14. நங்கையும் நாயும்—II

குறிப்பு :—பாடப்பிரிவு—'பாரா'—இன்னது எனப் பிள்ளைகட்கு விளக்கவும்.

சென்ற பாடத்தில் ஐந்து பாடப் பிரிவுகள் இருக்கின்றன. நீங்கள் ஒவ்வொன்றையும் படித்துத் தலைப்புக் கொடுக்கப் பழக வேண்டும்.

1. முதல் பாடப் பிரிவில் நங்கையின் குணங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. ஆதலால், அதன் தலைப்பு 'நங்கையின் குணங்கள்' என்று சொல்லலாம்.

2. இரண்டாம் பிரிவில் நங்கை மங்கை வீட்டு நாயை அடித்தது முக்கியமானது. ஆனதால், அதன் தலைப்பு 'நங்கையின் விஷமம்' என்பது தகும்.

3. மூன்றும் பிரிவில் நங்கை நவராத்திரிக் கொலுவைக் காணச் சென்றுள் என்பதே முக்கிய மானது. ஆனதால், அதன் தலைப்பு 'நங்கையும் நவராத்திரிக் கொலுவும்' என்று இருப்பது பொருத்தம் ஆகும்.

4. நான்காம் பிரிவில், நங்கையை நாய் தாக்கியதே கூறப்பட்டு உள்ளது. அதனால் அதற்கு, 'விஷமத்தின் பலன்' எனத் தலைப்பு இடுவது பொருத்தம் ஆகும்.

5. ஐந்தாம் பிரிவில் நங்கை கற்றுக்கொண்ட பாடமே சிறந்தது. ஆதலால் அதன் தலைப்பை 'நங்கை கற்ற பாடம்' என்று அமைத்தல் தக்கது.
எனவே,

நங்கையும் நாயும்—சம்பவத்தின் பெயர்

நங்கையின் குணங்கள் — முதல் பிரிவின் தலைப்பு
நங்கையின் விஷமம் — இரண்டாம் பிரிவின் தலைப்பு
நங்கையும் நவராத்திரிக் கொலுவும் — மூன்றும் பிரிவின் தலைப்பு
விஷமத்தின் பலன் — நான்காம் பிரிவின் தலைப்பு
நங்கை கற்ற பாடம் — ஐந்தாம் பிரிவின் தலைப்பு ஆகும்.

பயிற்சி

1. இத் தலைப்புகளைத் தந்து ஐந்து பிரிவுகளையும் ஒழுங்காக எழுதிக் காட்டு.

2. 'தெருவில் காலைக் காட்சி'—இத்தலைப்பு இட்டு ஒரு பிரிவு எழுது.

3. 'ஊரில் காலைக் காட்சி' என்னும் தலைப்பின் கீழ் ஒரு பிரிவு எழுது.

4. 'ஊருக்கு வெளியில் உள்ள காலைக் காட்சி' என்னும் தலைப்பின் கீழ் ஒரு பிரிவு எழுது.

5. இப்பாடத்தில் உள்ள சொல் தொடர்கள் எத்தனை?

6. முருகன் வந்தான். முருகன் வந்து — இந்த இரண்டும் சொல் தொடர்களே. ஆனால் 'முருகன் வந்தான்' என்பது **கருத்து முடிந்து நிற்கும் சொல் தொடர்.** 'முருகன் வந்து' என்பது கருத்து முடியாத சொல் தொடர். கருத்து முடிந்து நிற்கும் சொல் தொடருக்குப் பின் **முற்றுப் புள்ளி** இடவேண்டும். முற்றுப்புள்ளி இடப்பட்ட தொடர் **வாக்கியம்** எனப்படும்.

இந்தப் பாடத்தில் உள்ள முற்றுப் புள்ளிகளை எண்ணிச் சொல்.

---

15. அனைவரும் ஆண்டவன் மக்கள்

1. உலகில் இருப்பவர் பாரீர் — இவர்
பார்வைக்கு வேறுதல் காணீர்
இடத்தினிற் கேற்ற நிறத்தை—இவர்
எய்தனர்; என்செய லாகும்?

2. மஞ்சள் நிறத்தவர் ஒருவர்—செம்மை
மங்கிய நிறத்தவர் ஒருவர்
வஞ்சமில் வெண்ணிறத் தொருவர்—கருமை
வழிந்திடும் நிறத்தவர் ஒருவர்

3. உஷ்ண நாட்டவர் ஒருவர்—குளிர்
உதறிடும் நாட்டவர் ஒருவர்

கஷ்ட நிலையினர் ஒருவர்—என்றும்
களிப்புடன் வாழ்பவர் ஒருவர்.

4. எந்த நிறத்தவர் எனினும்—அவர்
எல்லோரும் ஆண்டவன் மக்கள்
எந்த இடத்தவர் எனினும்—அவர்
எல்லோரும் இறைவனின் மக்கள்.

5. எந்த நிலையினர் எனினும்—அவர்
எம்பெரு மானுடை மக்கள்
இந்தநல் உண்மை உணர்ந்தே—நாம்
இன்புடன் வாழ்ந்திடல் நன்றே.

—வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.

குறிப்பு:—ஆசிரியர் பல நாட்டாரைப் பற்றியும் விளக்க வேண்டும்.

மஞ்சள் நிறத்தவர்—ஜப்பானியர், சீனர், மங்கோலியர், பர்மியர்.

வெள்ளை நிறத்தவர் — ஐரோப்பியர்.

கருமை நிறத்தவர் — நீக்ரோ ஜாதியார்; ஆப்பிரிக்காவில் இருப்பவர்.

செம்மை மங்கிய நிறத்தவர் — இந்தியர்.

கேள்விகள்

1. இங்குக் கூறப்பட்ட நிறங்கள் எவை? அவற்றை உடையவர் யார் யார்?

2. என்றும் களிப்புடன் வாழ்பவர் யார்? கஷ்ட நிலையினர் யார்?

3. இவர் அனைவரும் எவர் மக்கள்?

4. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

I. பிழையைத் திருத்திப் படி :—

(1) இவன் போகிறாள். (2) அவள் பாடுகிறான்.

(3) அவர்கள் வருகிறான். (4) அது ஓடுகின்றன.

(5) அவை ஓடுகிறது.

II. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) வீட்டில் புலி ———. (இருக்கிறது, இல்லை)

(2) பாம்பைப் பார்த்துப் படையும் ———. (நடுங்காது, நடுங்கும்)

(3) ஆலமரம் நிழல் ———. (தராது, தரும்)

(4) தென்னைமரம் நிழல் ———. (தரும், தராது)

(5) தம்பி பாடம் ———. (தூங்குகிறான், படிக்கிறான்)

III. கட்டத்துள் உள்ள சொற்களைப் பொருத்தமான இடங்களில் அமைத்துப் படி :—

கூட்டில்	கூண்டில்	வளையில்
பெட்டியில்	பானையில்	புற்றில்

(1) புளி ——— இருக்கிறது.

(2) புலி ——— இருக்கிறது.

(3) கிளி ——— இருக்கிறது.

(4) பாம்பு ——— இருக்கிறது.

(5) எலி ——— இருக்கிறது.

(6) பணம் ——— இருக்கிறது.

16. தெருவில் நடந்த நிகழ்ச்சி

புதிய சொற்கள் :—மூன்றும்—ஒன்பதரை —புறப்பட்டேன்— காட்சி — என்பேன் — சோடா — கோபமாக — பேசிக் கொண்டனர் — கடைக்காரன் — வாங்க—வந்தவன் — வந்துவிட்டது—பதட்டமாக—கொள்ளை அடிக்க - பார்க் கிருயா—பிறகு—முற்றின — கை கலந்தனர்—சோடா புட்டி—வடிந்துகொண்டு—திடீரென—போலீஸ் சேவ கர்—தோன்றினர்—ஸ்டேஷன்—மிக்க மகிழ்ச்சி.

நான் மூன்றும் வகுப்பு மாணவன். என் பெயர் வேலன். நான் இன்று காலை ஒன்பதரை மணிக்குப் பள்ளிக்கூடம் போகப் புறப்பட்டேன். ஆ! நான் வழி யில் கண்ட காட்சியை என்ன என்பேன்!

ஒரு சிறிய சோடாக் கடையில் இருவர் கோபமாகப் பேசிக்கொண்டனர். அவர்களில் ஒருவன் கடைக்காரன்;

மற்றவன் சோடா வாங்க வந்தவன். வந்தவன் கடைக்காரனைப் பார்த்து, 'சோடா என்ன விலை?' என்றான். கடைக்காரன், 'அரையணா' என்றான். வந்தவன், 'காலணா இல்லையா?' என்று கேட்டான். உடனே கடைக்காரனுக்குக் கோபம் வந்து விட்டது. அவன், 'ஏனடா, ஊரைக் கொள்ளை அடிக்கப் பார்க்கிறாயா?' என்று பதட்டமாகக் கேட்டான்.

பிறகு ஒருவரை ஒருவர் வைது கொண்டனர். சொற்கள் முற்றின. இருவரும் கை கலந்தனர். சோடா புட்டிகள் பறந்தன. தெருவில் ஜனக்கூட்டம் கூடியது. இருவர் உடம்பிலும் இரத்தம் வடிந்துகொண்டு இருந்தது.

அந்தச் சமயத்தில் அங்குத் திடீரெனப் போலீஸ் சேவகர் இருவர் தோன்றினர். அவர்கள் சண்டையிட்ட இருவரையும் பிடித்துக் கொண்டனர்; போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்.

நான் இந்த நிகழ்ச்சியை என் ஆசிரியரிடம் கூறினேன். அவர் எல்லாப் பிள்ளைகளுக்கும் இதனைத் தெரிவித்தார்; 'இச்சம்பவத்தால் நீங்கள் என்ன அறிகிறீர்கள்?' என்று எங்களைக் கேட்டார். நாங்கள், "'கோபம் கூடாது; எவரிடமும் மரியாதையாகப் பேசவேண்டும்' என்பதை அறிகிறோம்" என்றோம். ஆசிரியர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

கேள்விகள்

1. வேலன் வழியில் கண்ட காட்சி யாது ?
2. சண்டைக்குக் காரணம் என்ன ?
3. இருவரும் அடைந்த பலன் என்ன ?
4. நீ இப்பாடத்தால் அறியும் நீதி யாது ?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாகப் படி.

2. சம்பவம், ஸ்டேஷன், ஏனடா, கோபமாக — இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. போலீஸ் ஸ்டேஷன். இதுபோன்ற சில ஸ்டேஷன்களைச் சொல் :—

(1) —— ஸ்டேஷன். (2) —— ஸ்டேஷன்.

4. மரியாதை × அவமரியாதை—எதிர்ப்பதம். இதுபோன்ற எதிர்ப்பதங்கள் இரண்டு சொல்.

5. இப்பாடத்தில் வந்துள்ள பொருட்பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப் பெயர் இவற்றைக் கூறு.

6. ஒருமை, பன்மைகளைச் சொல்.

7. வினைச்சொற்களை எடுத்து எழுது.

8. முற்றுப் புள்ளிகளை இடம் பார்த்து வை :—

நான் பாடம் படித்தேன்	நான் விளையாடினேன்
அவன் விளையாடி	நான் பாடம் படித்து
நீ அவனைப் பார்த்தாய்	நீ அவனைப் பார்த்து

17. உலோகங்கள்

புதிய சொற்கள் :—உலோகங்கள்—கலந்து—சுரங்கம்—விலை—நாணயங்கள்—ஆனவை—சேர்க்கை — துரு — வெள்ளீயம்—காரீயம்—பூசப்பட்ட—களிம்பு—ஏருது.

பொன், வெள்ளி, இரும்பு, ஈயம், செம்பு இவை உலோகங்கள் எனப்படும். இவை பூமியிலிருந்து எடுக்கப்படுகின்றன. இவை பூமியில் மண், கல் முதலியவற்றுடன் கலந்து இருக்கும். இவை வெளியில் எடுக்கப்பட்ட பின் சுத்தம் செய்யப்படும். இவற்றை வெட்டி எடுக்கும் இடங்கள் 'சுரங்கங்கள்' எனப்படும்.

இந்த உலோகங்களில் விலை உயர்ந்தது பொன். இதன் நிறம் மஞ்சள். இது மிகவும் நயம் உடையது. சுத்தமான பொன் தங்கம் எனப்படும். இதனுடன் சிறிது செம்பு சேர்த்தால் பொன் ஆகும். பொன்னினால் நகைகள் பல செய்யப்படுகின்றன.

வெள்ளி வெண்மை நிறம் உடையது. இது பொன்னைவிடக் குறைந்த விலை உள்ளது. ஏழை மக்கள் வெள்ளி நகைகள் செய்வார்கள். வெள்ளி, பாத்திரங்கள் செய்யவும் பயன்படுகிறது.

இரும்பும் வெண்மை நிறம் உடையதே. ஆனால், அது காற்று, தண்ணீர் இவற்றின் சேர்க்கையால் துரு ஏறிக் கருநிறம் அடைகிறது. அதனால், பலர் இரும்பின்

நிறம் கருமை என்றே நினைப்பர். இரும்பு உலகில் பயன்படும் அளவு வேறு எந்த உலோகமும் பயன்படுவது இல்லை. இதன் மிகுந்த உபயோகத்தால் இதனைப் பலர் 'கரும் பொன்' என்பர். கரண்டி, கத்தி, சுத்தி, உளி, பூட்டு, ஆணி முதலியன இரும்பால் ஆனவை.

செம்பு சிவந்த நிறம் உடையது. செப்புப் பாத்திரங்களில் புளிப்புப் பொருள்கள் பட்டால் களிம்பு உண்டாகும். களிம்பு உடம்பிற்குக் கெடுதி செய்யும். செம்பினால் குடம், தவலை, தகடுகள், கம்பிகள் முதலியன செய்யலாம்.

ஈயம் 'காரீயம், வெள்ளீயம்' என இரண்டு வகைப் படும். இவற்றுள் வெள்ளீயமே சுத்தமானது. பாத்திரங்களில் பூசப்படுவது வெள்ளீயமே ஆகும். ஈயம் பூசப் பட்ட பாத்திரங்களில் களிம்பு ஏறுது. ஈயப் பாத்திரங்கள் சமையல் செய்ய உதவும்.

கேள்விகள்

1. உலோகங்கள் எவை? அவை எங்கே உள்ளன?
2. பொன், வெள்ளி, இரும்பு, செம்பு — இவற்றின் நிறம் என்ன?
3. பொன், தங்கம், காரீயம், வெள்ளீயம்—என்பன யாவை?
4. இரும்பின் உபயோகம் என்ன?
5. ஈயம் எப்படி உபயோகப்படுகிறது?

பயிற்சி

1. பிரித்து எழுது :—இதனுடன், பூமியிலிருந்து, வெள்ளியால், வெள்ளீயம்.

2. உயர்ந்தது × தாழ்ந்தது } இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.
ஏறும் × ஏறுது

3. வெண்மை, கருமை, சிவப்பு, மஞ்சள்: இவற்றைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக அமைத்துப் படி :—

(1) இரும்பு —— நிறம் உடையது.
(2) தங்கத்தின் நிறம் ——.
(3) வெள்ளி —— —— உடையது.
(4) செம்பு —— நிறம் ——.

4. சுரங்கம், நாணயம், பாத்திரம், களிம்பு — இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

5. இவை வெளியில் எடுக்கப்பட்டபின் சுத்தம் செய்யப் படும்.—இந்தப் பெரிய வாக்கியத்தை இரண்டு சிறு வாக்கியங்களாகப் பிரிக்கலாம் :

(1) இவை வெளியில் எடுக்கப்படும் ;
(2) பின் சுத்தம் செய்யப்படும்.

இம்மாதிரி, இப்பாடத்தில் உள்ள பெரிய வாக்கியங்களை இரண்டாகப் பிரித்து எழுது.

18. நாணயங்கள்

புதிய சொற்கள் :—காலணு—அரசர் — மற்ருெரு — மதிப்பு — பட்டம் — பதிக்கப்பட்டு —குறிக்கப்பட்டு—பைசா—வீசம்—அரைக்கால்—நிக்கல்— உடையது.

பை, காலணு, ஓர் அணு, இரண்டு அணு, நான்கு அணு, எட்டு அணு, ஒரு ரூபாய் என்பன நாம் உபயோகிக்கும் நாணயங்கள் ஆகும். இவற்றுள் பை, கால் அணு, என்பவை செம்பால் ஆனவை; ஓர் அணு, இரண்டு அணு, நான்கு அணு நாணயங்கள் நிக்கல் என்னும் உலோகத்தால் ஆனவை. நான்கு அணு, எட்டு அணு, ஒரு ரூபாய் என்பவை வெள்ளியும் நிக்கலும் கலந்த உலோகத்தால் ஆனவை.

நாணயங்கள் இரண்டு பக்கங்கள் உள்ளவை. ஒரு பக்கத்தில் நம்மைக் காக்கும் அரசர் தலை பதிக்கப்பட்டு இருக்கிறது. அதைச் சுற்றி அவர் பெயரும் பட்டமும் பதிக்கப்பட்டு உள்ளன. மற்ருெரு பக்கத்தில் நாணயத்தின் மதிப்பும் அதனை அடித்த வருஷமும் குறிக்கப்பட்டு இருக்கின்றன.



இது பை. மூன்று பை ஒரு காலணு. இது பைசா என்றும் சொல்லப்படும்.

இது காலணு. இதன் மதிப்பு மூன்று தம்பிடிகள். இது சென்னையில் 'பைசா' எனப்படும்.

இது ஓர் அணா. இதன் மதிப்பு நான்கு கால் அணா அல்லது பன்னிரண்டு பைகள். இது ‘வீசம் ரூபாய்’ என்றும் சொல்லப்படும்.

இது இரண்டு அணா நாணயம். இது ஒன்றுதான் சதுரமாக இருப்பது. இது நிக்கலினால் ஆனது. இது ‘அரைக்கால் ரூபாய்’ எனப்படும்.





இது நான்கு அணா நாணயம். வட்டமாக இருப்பது வெள்ளி கலந்த கலவை உலோகத்தால் ஆனது; விளிம்பில் வளைவுகளை உடையது நிக்கலால் ஆனது. இது ‘கால் ரூபாய்’ எனப்படும்.

இது எட்டு அணா அல்லது அரை ரூபாய் நாணயம். இது வெள்ளி கலந்த கலவை உலோகத்தால் ஆனது. இதன் மதிப்பு நான்கு இரண்டு அணாக்கள் அல்லது இரண்டு கால் ரூபாய்கள் ஆகும்.

இது ஒரு ரூபாய் நாணயம். இது இரண்டு அரை ரூபாய்கள், நான்கு கால் ரூபாய்கள், எட்டு இரண்டு அணாக்கள் அல்லது பதினாறு ஓர் அணாக்கள் மதிப்பு உடையது.

கேள்விகள்

1. நிக்கல் நாணயங்கள் எவை? செம்பு நாணயங்கள் எவை? வெள்ளியும் நிக்கலும் கலந்த நாணயங்கள் எவை?

2. கால் அணு, அரைக்கால் ரூபாய், அரை ரூபாய்—இவை என்ன நாணயங்கள்?

3. ஒரு ரூபாய் கொடுத்து—ஓர் அரை ரூபாயும் ஓர் அரைக்கால் ரூபாயும் பெற்றுக்கொண்ட பின் மீதிக்கு எத்தனை காலணுக்கள் கிடைக்கும்?

4. இரண்டணுவில் ஓர் அணு இரண்டு பைக்குப் பழம் வாங்கிய பின் மீதி என்ன இருக்கும்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:-

(1) ஒரு ரூபாய்க்குப் —— அணுக்கள்.

(2) ஓர் அரை ரூபாய்க்கு —— அணுக்கள்.

(3) ஒரு கால் ரூபாய்க்குப் —— காலணுக்கள்.

(4) ——ரூபாய்க்கு இருபத்து நான்கு பைகள்.

2. சேர்த்து எழுது :—கால் + அணு, அரை + அணு, அரை + கால்.

3. பிரித்து எழுது :—நான்கணு, இரண்டணு, முக்காலணு.

4. அணு, ரூபாய், தம்பிடி—பன்மை எண் கூறுக.

5. பிள்ளைகள், கம்பிகள், நாணயங்கள்—ஒருமை எண் கூறுக.

6. நம் அரசர் 'ஆரும் ஜார்ஜ்' என்பவர்.—அவரைப் பற்றி நீ அறிந்ததைக் கூறு.

7. இப்பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை? கட்டம் போட்டு எழுதிக் காட்டு.

8. இப்பாடத்தில் உள்ள ஒருமை—பன்மைகளையும் கட்டம் போட்டு எழுதிக் காட்டு.

19. பால் பண்ணை

புதிய சொற்கள் :—ஆயிரம்—அறிஞர்—மற்றவர்—கலந்துபேசி—மேற்பார்வை—திடல்—தகரம் — கொட்டகை—முந்நூறு—வைக்கோல்—பருத்திக்கொட்டை—பிண்ணாக்கு மேய்கின்றன—கவனிக்க—தீனி—நிரம்ப—கறக்கின்றன—பத்திரப்படுத்தி—நகரத்திற்கு-அனுப்புகிறார்-பண்ணை—நகரத்தார்—வெண்ணெய்—கொழுத்து—உண்டா.

எங்கள் கிராமம் இரண்டு ஆயிரம் வீடுகளை உடையது. அதில் சுமார் முந்நூறு பசுக்கள் உள்ளன. எங்கள் கிராமத்தில் பெரிய அறிஞர் ஒருவர் இருக்கிறார். அவர் ஐம்பது பசுக்களை உடையவர். அவர் மற்றவ



ரோடு கலந்து பேசி, எல்லாப் பசுக்களையும் தமது மேற்பார்வையில் வைத்துக்கொண்டார்.

எங்கள் கிராமத்தில் பெரிய திடல் உண்டு. அதில் தகரக் கொட்டகை ஒன்று மிகப் பெரிய அளவில்

போடப்பட்டது. அதில் முந்நூறு பசுக்களும் இருக்க வசதி செய்யப்பட்டது. பசுக்களுக்கு நல்ல புல், வைக்கோல், பருத்திக் கொட்டை, பிண்ணுக்கு முதலி யவை தினமும் தரப்படுகின்றன. பசுக்கள் வெளியிலும் நன்ருய் மேய்கின்றன.

பசுக்களைக் கவனிக்கப் பதினைந்து பேர் இருக்கின் றனர். பசுக்கள் நன்ருகத் தீனி தின்பதால், பால் நிரம் பக் கறக்கின்றன. அறிஞர் அந்தப் பாலில் பாதியைப் பத்திரப்படுத்தி, மோட்டாரில் ஏற்றிப் பக்கத்து நகரத்



திற்கு அனுப்புகிருர். அந்தப் பாலை அங்கு வீடு வீடாகச் சென்று விற்க ஆட்கள் இருக்கிருர்கள். இவ் வேலை காலை-மாலைகளில் நடைபெறுகிறது.

தினமும் பாலைக் கொண்டு தயிர், மோர், வெண் ணெய், நெய் என்பன செய்யப்படும். அவை அடுத்த நகரத்தில் வழக்கமாக வாங்குவோர்க்குக் கொடுக்கப் படும். பாலும் மற்றவையும் சுத்தமானவை; தண்ணீர்க்

கலப்பு இல்லாதவை. ஆதலால், அவை நன்ருய்ச் செல வாகின்றன.

இந்தப் பால் பண்ணையால் மிகுந்த லாபம் கிடைக் கிறது. பசுக்களின் சொந்தக்காரர்கள் சுகமாக வாழ் கிருர்கள். பக்கத்து நகரத்தாரும் நல்ல பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவற்றை உண்டு சுகமாக இருக்கிருர்கள். பசுக்களும் நோய் இல்லாமல் கொழுத்து இருக்கின்றன.

நாங்கள் எல்லோரும் அறிஞரை வாழ்த்துகிருேம். உங்கள் ஊரில் பால் பண்ணை உண்டா?

கேள்விகள்

1. அறிஞர் செய்த வேலை யாது?
2. அவர் செய்தது நல்லதா? எப்படி?
3. 'பால் பண்ணை' என்பது யாது?
4. நீ அதைப் பற்றி என்ன நினைக்கிருய்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

(1) பசுக்களைக் —— ப் பதினைந்து பேர் ——.
(2) நாங்கள் —— அறிஞரை ——.
(3) பசுக்களும் நோய் —— கொழுத்து ——.

2. மேற்பார்வை, கொழுத்து, அறிஞர், திடல்.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி:—

ஆட்கள்	மேய்கின்றன
அவை	இருக்கிறார்
அறிஞர்	செலவாகின்றன
பசுக்கள்	விற்கிறார்கள்

4. இப்பாடத்தில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கூறு.

5. பெயர்ச் சொற்களை எழுது.

6. வினைச் சொற்களை எழுதிக் காட்டு.

7. பக்கத்து நகரத்தாரும் இவற்றை உண்டு சுகமாக இருக்கிறார்கள்.—இதனை இரண்டு வாக்கியங்களாகப் பிரி.

8. தடித்த சொற்களில் பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?

(1) ஓர் **அடி** நீளம், அவனை **அடி**.

(2) குருவிக் **கூடு**, நல்லவரைக் **கூடு**.

(3) மனக் **குறை**, மூன்றில் ஒன்றைக் **குறை**.

---

20. பழமொழிகள்

புதிய சொற்கள் :—இளமை—கல்—சிலை — கருந்தனம் — நூல் — ஓது—கற்றோர்—சிறப்பு—திரை—திரவியம் — பாதாளம்—வரையிலும்—காணி—சோழ—உயர - உழுதுண்டு —வாழ்வதற்கு—ஒப்பு—இனிது.

கல்வி

1. **இளமையில் கல்.**
2. **இளமையில் கல்வி சிலையில் எழுத்து.**

3. கல்வியே கருந்தனம்.
4. காலை மாலை நூலை ஓது.
5. கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

செல்வம்

1. பணம் இல்லாதவன் பிணம்.
2. பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே.
3. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.
4. பணம் பாதாளம் வரையிலும் பாயும்.
5. காணி காணியாய்ச் சேர்த்தால் கோடி கோடி ஆகும்.

உழவு

1. நீர் உயர நெல் உயரும்.
2. உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை.
3. தொழுதூண் சுவையில் உழுதூண் இனிது.
4. பாராத பயிர் பாழ்.
5. பருவத்தே பயிர் செய்.

பயிற்சி

1. இளமை + இல் = இளமையில்
தொழுது + ஊண் = தொழுதூண் (தொழுது உண்ணுதல்)
உழுது + ஊண் = உழுதூண் (உழுது உண்ணுதல்)
கருமை + தனம் = கருந்தனம் (நிலையுள்ள சொத்து)

இப்படியே கீழ் வருவனவற்றைப் பிரி :—
கற்றோர்க்கு, சுவையில், காணியாய்.

2. உனக்குத் தெரிந்த வேறு பழமொழிகளைச் சொல்.
3. உன் தாயாரைக் கேட்டு 4 பழமொழிகளைத் தெரிந்துவா.

4. உன் தகப்பனாரைக் கேட்டு 4 பழமொழிகளைத் தெரிந்துவா.

5. எதிர் எதிரில் உள்ளவற்றில் பொருத்தமானவற்றைச் சேர்த்து வாக்கியம் அமை :—

1. நான்	கூடை முடைகிறாள்
2. நீ	பழங்கள் இருக்கின்றன
3. அவன்	நீரில் நீந்துகிறது
4. அவள்	வட்டம் இடுகின்றன
5. அவர்கள்	நாளும் பாடம் படிக்கிறேன்
6. கூடையில்	மணியை அறிவிக்கிறது
7. வாத்து	பெய்து ஓய்ந்தது
8. கருடன்	வேகமாக நடந்தான்
9. பருந்துகள்	பாடம் கற்பிக்கிறார்
10. கடிகாரம்	எந்த வகுப்பில் வாசிக்கிறாய்?
11. மழை	வேடிக்கை பார்க்கிறார்கள்
12. ஆசிரியர்	வானத்தில் பறக்கிறது

6. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :-

(1) நான் பாடம் ——. (படித்தான், படித்தேன்)

(2) அவன் தலை ——. (சீவினான், சீவினாள்)

(3) குதிரை வண்டி ——. (இழுக்கின்றன, இழுக்கிறது)

(4) மீன்கள் நீரில் ——. (வாழ்கின்றன, வாழ்கிறது)

(5) நீ நீரில் ——. (குளித்தான், குளித்தாய்)

(6) அவர்கள் ஆடை ——. (வாங்கினான், வாங்கினாள், வாங்கினார்கள்)

21. பாண்டியன் நெடுஞ்செழியன்

புதிய சொற்கள்:—பாண்டியர்—மதுரை—தலைநகரம்—நெடுஞ் செழியன்—தவறுதவன்—ஆரிய அரசர் — அடிக்கடி — படையெடுத்தனர்—போரில்-தோற்கடித்தான் - வென்ற — சாத்தனர்—கபிலர்—பரணர்—நக்கீரர்—சங்கம்—அந் தப்புரம்—அரண்மனை—சிலம்பு—கள்வன்—கொன்று— வருக — சினம் — அல்லன் — நொந்துகொண்டான் — வீழ்ந்து—அநியாயம்—மெய்ப்பித்தாள்.

பாண்டியர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தமிழ் அரசர். அவருள் சிறந்தவன் நெடுஞ் செழியன் என்பவன். அவன் நீதி தவறுதவன்; அவன் காலத்தில் தமிழ் நாட்டுக்கு வடக்கே ஆரிய அரசர்கள் இருந்தார்கள். அவர்கள் அடிக்கடித் தமிழ் நாட்டின் மீது படையெடுத்தனர். பாண்டியன் பெரிய படையோடு வடக்கே சென்றான்; அந்த ஆரிய அரசர்களைப் போரில் தோற்கடித்தான்; அதனல் 'ஆரியப் படை வென்ற நெடுஞ்செழியன்' என்று பெயர் பெற்றான்.

அவன் சிறந்த தமிழ்ப் புலவன்; பல தமிழ்ப் புல வரை ஆதரித்தான். அவன் காலத்தில் சாத்தனர், பரணர், கபிலர், நக்கீரர் என்னும் சிறந்த புலவர்கள் இருந்தார் கள். அவர்கள் பல தமிழ்ப் பாடல்களைப் பாடினர்கள். அவர்கள் சேர்ந்து இருந்த இடம் 'தமிழ்ச் சங்கம்' எனப் பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்கம் தமிழுக்குப் பெயர் பெற்றது.

நெடுஞ்செழியன் ஒரு நாள் அந்தப்புரத்திற்குப் போய்க்கொண்டு இருந்தான். அப்போது அரண்மனைத் தட்டான் அவனைக் கண்டு, "அரசியின் சிலம்பைத் திருடிய கள்வனைக் கண்டுபிடித்தேன்" என்றான். அரசன் அவசரப்பட்டு, "அவனைக் கொன்று, அச் சிலம்பைக் கொண்டுவருக" என்றான்.

கள்வன் என்று தட்டானால் கூறப்பட்டவன் உண்மையில் கள்வன் அல்லன். அவன் பெயர் கோவலன். அவன் தன் மனைவி கண்ணகியின் கால் சிலம்பை விற்க வந்தவன். அரசியின் சிலம்பைத் திருடியவன் அரண்மனைத் தட்டானே ஆவன். ஆயினும், பாவம்! கோவலன் அநியாயமாகக் கொல்லப்பட்டான்.

அவன் மனைவியான கண்ணகி மிகுந்த சினத்துடன் வந்து பாண்டியனைக் கண்டாள்; தன் மற்றொரு சிலம்பைக் காட்டித் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை மெய்ப்பித்தாள். பாண்டியன் தன் குற்றத்தை உணர்ந்தான்; தன்னைத் தானே நொந்துகொண்டான்; உடனே வீழ்ந்து இறந்தான். இத்தகைய செங்கோல் வேந்தரைப் பெற்றது பாண்டிய நாடு.

கேள்விகள்

1. நெடுஞ்செழியன் வீரன் என்பது எதனால் தெரிகிறது?
2. அவன் காலத்துப் புலவர்கள் யார்?
3. அவன் காலத்தில் நடந்த நிகழ்ச்சி யாது?
4. அவன் நீதி தவறாதவன் என்பதை எப்படி மெய்ப்பிக்கலாம்?

பயிற்சி

1. மதுரை, போரில், கொன்று, வீழ்ந்து— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. நாடு, நகரம், ஊர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. இப்பாடத்தை மௌனமாகப் படி. ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன? சொல்.

4. முதல் பிரிவில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.

5. இரண்டாம் பிரிவில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.

6. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. பாண்டியர் ——— மதுரை.
2. பாண்டியர் ——— வளர்த்தவர்.
3. மதுரையில் ——— ——— இருந்தது.

7. பெயர்ச் சொல்லுக்கு ஏற்ற வினைச் சொல்லைச் சேர்த்துப் படி :—

(1) மீன்	பால் தரும்
(2) மாணவர்	முட்டை இடும்
(3) கழுதை	பாடம் படிப்பர்
(4) ஆடு	பொதி சுமக்கும்

8. தக்க சொற்களைச் சேர்த்துப் படி :—

(1) மீன்	காட்டில் வாழும்	பறவை
(2) புலி	மரத்தில் வாழும்	பிராணி
(3) கிளி	நீரில் வாழும்	மிருகம்

22. கிராமத் திருவிழா

புதிய சொற்கள் :—கோவில்—புகழ்—தரிசிக்க— சுற்றுப்பக்கம் —பலி— வேப்பிலை — பிரார்த்தனை — அடித்துக்கொள்வர்—கொளுத்தி—கற்பூரம்—கும்பிடு-— விசேஷமானது —வடம்—சுற்றி வர—கண் கொள்ளாக் காட்சி — மிட்டாய்—வருவார்—போவார்— பறிப்பதில் — கண்ணுக—வாண வேடிக்கை—மதிக்கப்படுகிறது—பட்டாணி.

எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் இருக்கிறது. அந்த அம்மன் புகழ் பெற்றது. ஆவணி மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் அம்மனை வணங்கப் பலர் வருவர். அவர்கள் சுற்றுப் பக்கங்களில் உள்ள கிராமத்தினர். அவர்கள் அம்மனுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலி இடுவர்.

சிலர் உடம்பில் வேப்பிலையைக் கட்டிக்கொண்டு கோவிலை மூன்று முறை வலம் வருவர். பலர் அம்மனுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டபடியே தலையை மொட்டை அடித்துக்கொள்வர். வேறு பலர் தேங்காய், பழம் முதலியன படைத்துக் கற்பூரம் கொளுத்திக் கும்பிட்டுச் செல்வர்.

ஆவணியில் கடைசி ஞாயிற்றுக்கிழமை சிறப்பானது. அந்த நாளில் அம்மன் தேர் மீது வரும். சிறியவர்முதல் பெரியவர்வரை எல்லோரும் தேர் வடத்தை இழுப்பார்கள். தேர் கோவிலைச் சுற்றியுள்ள நான்கு தெருக்களையும் சுற்றிவரப் பாதி நாள் ஆகும்.

அந்த நாளில் எங்கள் ஊர் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். எங்கும் பாத்திரக் கடைகள், பட்டாணிக் கடைகள், ஜவுளிக் கடைகள், மிட்டாய்க் கடைகள், வளையல் கடைகள், சிற்றுண்டிக் கடைகள் நிறைந்து இருக்கும். வருவார் போவார் தமக்கு வேண்டும் பொருள்களை வாங்கிச் செல்வர்.



வேடிக்கைக் கடைகளும் நிரம்பி இருக்கும். இராட்டினம் சுற்றுவோர், படங்களைக் காட்டுவோர், வேறு வேடிக்கைகள் காட்டுவோர் சுறுசுறுப்பாகப் பணம்பறிப்பதில் கருத்தாக இருப்பர். அந்தக் கடைசி நாள் இரவு முழுவதும் பகலாகவே இருக்கும். இரவில் வாண வேடிக்கை நடக்கும். மாரி அம்மன் ஆலயம் இருப்பதால் எங்கள் ஊர், சுற்றுப்பக்கத்தாரால் சிறப்பு உடையதாக மதிக்கப்படுகிறது.

கேள்விகள்

1. மக்கள் அம்மனை எந்த எந்த முறையில் தொழுகின்றனர்?
2. ஆவணிக் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஏன் சிறப்பு உடையது?
3. திருவிழாவுக்கு வரும் கடைகள் எவை?

பயிற்சி

1. நீ கண்ட திருவிழாவைப் பற்றி அறிந்ததைச் சொல்.
2. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை?
3. கோவில், பிரார்த்தனை, தொழுதல், சுற்றியுள்ள.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. விசேஷம், சிறப்பு—ஒரே அர்த்தமுடைய சொற்கள். இப்படி ஒரே பொருளைத் தரும் இரண்டு சொற்களை இப்பாடத்திலிருந்து சொல்.

5.

சிறுவர் × பெரியவர்		
கிராமத்தார் × நகரத்தார்	இவை எதிர்ப் பதங்கள்.	
சிலர் × பலர்	இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.	
வலம் × இடம்		

6. (1) கடைகள், கிராமத்தினர், படங்கள்-ஒருமை எண் கூறு.

   (2) இராட்டினம், கடை, ஊர்—பன்மை எண் கூறு.

7. இடுவர், செல்வர், வருவர், கோவில், ஞாயிறு, தேங்காய், சுற்றுவர்—பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?

8. இப்பாடத்தில் உள்ள முற்றுப் புள்ளிகள் எத்தனை? அவற்றால் நீ என்ன அறிகிறாய்?

23. கடிதங்கள்

புதிய சொற்கள் :—வணக்கம்—வேண்டுவாம்—தயவு—மட்டும்—விடுமுறை — வேண்டுகிறேன் — பணிவுள்ள — அன்புள்ள—அத்தை—பரீக்ஷை—முதல்வனுக—தேறி—தெரிவிக்கவும்—இங்ஙனம்—சமயபுரம்.

(1)

சமயபுரம்,
15—9—'40.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

ஐயா, இன்று என் மாமன் வெளி ஊரிலிருந்து வந்திருக்கிருர். அவர் இன்று மாலேயே தம் ஊருக்குப் போவார். ஆதலால், அவருக்கு வேண்டும் சிறு வேலேகளேச் செய்ய நான் வீட்டில் இருக்க வேண்டுமாம். ஆதலால் தயவுசெய்து இன்று மட்டும் எனக்கு விடுமுறை கொடுக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் பணிவுள்ள மாணவன்,
மு. கோவிந்தன்.

திருவாளர்
க. நாராயண ஐயர் அவர்கள்,
மூன்ரும் வகுப்பு ஆசிரியர்,
ஆரம்பப் பாடசாலே,
சமயபுரம்.

(2)

கோடைக்கானல்,
20—10—'40.

அன்புள்ள அப்பா அவர்களுக்கு,

வணக்கம். நான் அத்தையிடம் சுகமாக இருக்கிறேன் ; நன்ருகப் பாடம் படிக்கிறேன். நான் என் வகுப்பில் நடந்த கால் வருடப் பரீக்ஷையில் முதல்வனுகத் தேறி இருக்கிறேன். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டும் அல்லவா ? அம்மாவுக்கு இதனைத் தெரிவிக்கவும். வணக்கம்.

இங்ஙனம் :
தங்கள் அன்புள்ள மகன்,
நாராயணன்.

திருவாளர்
கே. பழநியாண்டிப் பிள்ளை அவர்கள்,
20, கீழ ராஜ வீதி,
தஞ்சாவூர்.

பயிற்சி

1. 'வயிற்று வலி—விடுமுறை வேண்டும்' என்பதைத் தெரிவித்து ஆசிரியர்க்கு ஒரு கடிதம் எழுது.

2. 'புத்தகங்கள் வாங்கப் பணம் தேவை' என்பதை விளக்கி உன் தகப்பனுருக்கு ஒரு கடிதம் எழுது.

3. 'அக்காள் திருமணம்—மூன்று நாள் விடுமுறை வேண்டும்' என்பதை அறிவித்து ஆசிரியர்க்கு ஒரு கடிதம் எழுது.

4. உன் பள்ளிக்கூடத்தைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

5. கீழ் வரும் குறிப்புகளைக் கொண்டு 'நரியும் திராக்ஷையும்' என்னும் கதையை எழுது :—

நரி—திராக்ஷைக் கொல்லை—திராக்ஷைக் குலை—எட்டி எட்டி—எட்ட இல்லை— 'இந்தப் பழம் புளிக்கும்'—நரி போதல்.

6. எதிர் எதிர் உள்ளவற்றுள் பொருத்தமானவற்றைச் சேர்த்துப் படி :—

(1) வாழை	குலை
(2) வாழை	சுளை
(3) பலா	கன்று
(4) மா	சீப்பு
(5) திராக்ஷை	தாறு

24. தபால்காரர்

புதிய சொற்கள் :—தபால்காரர்—தோல் பை — தொங்குகிறது —கவர்—கார்டு—இடது கை—வலது கை—அவர் அவர்களுக்கு—முத்திரை இட்ட—வேண்டுவதை — பெறுவர் —தபால் பெட்டி—தபால் ஆபீசு—மூலம்.

படத்தில் நிற்பவர் தபால்காரர். இவர் உடைதான் தபால்காரர் உடை. இவர் கழுத்தில் தோல்பை தொங்குகிறது. அதில் தபால் கடிதங்கள், புதிய தபால் கவர்கள், கார்டுகள், தலைகள் முதலியன இருக்கின்றன.

இவரது இடது கையில் இருப்பவை பலருக்கும் கொடுக்கவேண்டும் கடிதங்கள். அவற்றில் ஒன்றே வலது கையில் இருப்பது. இவர் வெளி ஊர்களிலிருந்து

வந்த கடிதங்களை விலாசம் பார்த்து, அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார்; பணம் வந்திருந்தால் அதனையும் கொடுப்பார்.

இவர் கிராமங்களுக்கும் போய் வருவார். கிராமத்தார்க்கு அரசர் முத்திரை இட்ட கவர், கார்டு, தலை முதலியன வேண்டும் அல்லவா? அவர்கள் இவரிடம் காசுகொடுத்து வேண்டுவதைப் பெறுவர். ஒரு கவர் விலை ஒன்றேகால் அணா; கார்டு விலை முக்கால் அணா; தலை விலை பலவாறு வேறுபடும்.



ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தபால் பெட்டி இருக்கும். கிராமத்தார், தாம் எழுதும் கடிதங்களை அதில் போடுவார்கள். தபால்காரர் தினமும் கிராமத்திற்கு வந்து, பெட்டியைத் திறந்து, கடிதங்களை எடுத்துக்கொண்டு போவார்.

அவர் அவற்றைத் தபால் ஆபீசுக்கு எடுத்துச் செல்வார்; அங்கு அவற்றின் மீது முத்திரை இடுவார்; பிறகு அவற்றைப் பல பைகளில் போட்டுக் கட்டி, அக்கட்டின்மீது முத்திரை இடுவார். பின்னர் அவை சேரவேண்டும் இடங்களுக்குப் புகைவண்டி மூலமோ, வண்டி மூலமோ, ஆள் மூலமோ அனுப்பப்படும்.

கேள்விகள்

1. தபால்காரர் யார்? இவர் உடை எப்படி இருக்கும்?
2. இவர் இடது கையில் இருப்பவை என்ன?
3. இவர் பையில் என்ன இருக்கின்றன?
4. இவர் நாம் எழுதிப்போடும் கடிதங்களை என்ன செய்கிறார்?
5. கவர்—கார்டு—தலை : விலை என்ன?

பயிற்சி

1. கார்டு, கவர், தலை, தபால் ஆபீசு, தபால்காரர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப்படி:—

(1) இவர் ——. (2) இவர் கார்டு, ——, தலைகளை——.
(3) இவர் கிராமத்துக்குப் ——. (4) இவர் இடது —— இருப்பவை——.

3. முதல் பிரிவில் உள்ள பெயர்ச் சொற்களை எழுது.
4. இரண்டாம் பிரிவில் உள்ள வினைச் சொற்களை எழுது.
5. மூன்றாம் பிரிவில் உள்ள ஒருமைப் பெயர்களைச் சொல்.
6. நான்காம் பிரிவில் உள்ள பன்மைப் பெயர்களைச் சொல்.
7. தக்க சொற்களைச் சேர்த்துப் படி :—

(1) தபால்காரர்	காவல் காப்பார்
(2) போலீஸ்காரர்	கடிதங்கள் தருவார்.

25. யார்?

1\. பூவில் மணத்தைப் புகுத்தவர் யார்?—சிறு
புல்லில் பசுமை பதித்தவர் யார்?
ஆவின் மடியில் அனைவரும் ஆசிக்கும்
அற்புதப் பாலை அளித்தவர் யார்?

2\. மயிலுக்குத் தோகையும் மானுக்குப் புள்ளியும்
மீனுக்கு மின்னலும் வைத்தவர் யார்?
அயில்விழி அன்னைபால் அன்பை அடைத்தென்
ஆருயிர் காத்திடச் செய்தவர் யார்?

3\. ஓயாமல் ஓடிடும் ஓடைகளை,—சற்றும்
ஓயாமல் பாய்ந்திடும் ஆறுகளை
மாயாத நீருடை ஏரிகளைத் தந்தே
மன்னுயிர் வாழ்ந்திடச் செய்தவர் யார்?

4\. ஆழம் அறியாக் கடலினையும்—நீல
ஆகாய முத்துப் பந்தலையும்
வேழ முகத்தையும் வேங்கைப் புலியையும்
வேடிக்கை யாகப் படைத்தவர் யார்?

5\. தீயினில் வெம்மையும் நீரினில் தண்மையும்
தேனில் இனிப்பையும் திணித்தவர் யார்?
ஆயுங்கால் அன்னவர் அற்புத மானவர்
ஆண்டவர் ஆண்டவர் என்போமே.

—வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L.

குறிப்பு:—ஆசிக்கும் - ஆசைப்படும், அளித்தவர் - கொடுத்தவர், அயில் விழி - வேல் போன்ற கண், மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்கள், முத்து - நக்ஷத்திரம், வேழம் - யானை, வெம்மை - சூடு, தண்மை - குளிர்ச்சி.

கேள்விகள்

1. ஆண்டவர் என்னென்ன செய்திருக்கிறார்?

2. அவர் உனக்குத் தெரிந்த வேறு என்னென்ன செய்திருக்கிறார்?

3. நீ இப்பாடத்தால் என்ன அறிகிறாய்?

பயிற்சி

1. பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் பொருத்திக் காட்டு:—

(1) காகம்	கர்ச்சிக்கிறது
(2) பூனை	பிளிறுகிறது
(3) யானை	அலறுகிறது
(4) சிங்கம்	சீறுகிறது
(5) ஆந்தை	கரைகிறது

2. கீழ் வருவனவற்றை அர்த்தம் விளங்கப் பொருத்திப்படி:-

(1) சிங்கம்	வீட்டை	பறக்கும்
(2) பூனை	எலி	பிடிக்கும்
(3) பாம்பு	கூட்டில்	இருக்கும்
(4) நாய்	காட்டில்	வாழும்
(5) கிளி	புற்றில்	காக்கும்

26. ஔவையார்

(மௌன வாசிப்பு)

புதிய சொற்கள் :—சுமார்—ஔவையார்—மதிக்கப்பட்டவர்—சிற்றரசர் — பாதுகாத்தவன் — யோசனை—பாராட்டி—மலைக்காட்சி—சிகரம் — கரு நெல்லி மரம் — நீண்ட—உயிரோடு—உண்பவர்—அரும்பாடுபட்டு—பயன்—காக்கும்—தக்கவன்—சுறுசுறுப்பு—உற்சாகம்.

ஔவையார் சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ்ப் புலவர். இவர் ஓர் அம்மையார். இவரும் சங்க காலத்துப் புலவர். இவர் தமிழ் அரசர்களால் மதிக்கப்பட்டவர்; சிற்றரசரிடம் சிறப்புப் பெற்றவர். இவரை அதிக அன்புடன் பாதுகாத்தவன் ஒரு சிற்றரசன். அவன் பெயர் அதியமான்.

அதியமான் அரண்மனையில் ஔவையார் இருந்தார். இவர் அடிக்கடி அவனுக்கு வேண்டிய யோசனைகளைச் சொல்லி வந்தார்; அவனைப் பாராட்டிப் பல பாடல்களைப் பாடி வந்தார்; மாலை நேரங்களில் மலைக் காட்சியைக் காணப் போவார். இவ்வாறு ஔவையார் அதியமானிடம் சுகமாகக் காலம் கழித்து வந்தார்.

ஒரு நாள் ஔவையார் மலைப்பக்கம் சென்றார்; ஓங்கிய சிகரத்தின்மீது ஏறினார். அங்கு ஒரு கருநெல்லிமரம் வளர்ந்து இருந்தது. அதன் உச்சியில் பெரிய பழம் ஒன்று தொங்கியது. அப்பழத்தை உண்பவர் நீண்ட நாள் உயிரோடு இருப்பர். இந்த இரகசியம் ஔவை

யாருக்குத் தெரியும். அதனால் இவர் அரும்பாடுபட்டு, மரம் ஏறினார்; அப்பழத்தைக் கஷ்டப்பட்டுப் பறித்தார்.

“இப்பழத்தை நான் உண்பதால் என்ன பயன் உண்டாகும்? என்னைப் போன்ற ஏழைகளைக் காக்கும் அதியமான் இதனை உண்டால், நீண்ட நாள் உயிரோடு இருப்பான். அதனால் ஏழைகள் பலர் அவனிடம் உதவி பெறுவார்கள். ஆதலால், நான் இப்பழத்தை அதியமானுக்கே தருவேன். அவனே இதனை உண்ணத் தக்கவன்” என்று ஔவையார் எண்ணினார்.

அதியமான் ஔவையார் தந்த நெல்லிப்பழத்தை உண்டான்; அவன், உடம்பில் சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டாயின. அவன் பிறகுதான் அப்பழத்தின் சிறப்பை அறிந்தான். ஆ! அவன் ஔவையாரைப் புகழ்ந்தான்; தாமே உண்டு பயன் அடையாமல், தனக்குத் தந்த அவரது பெருங்குணத்தைப் பாராட்டினான்.

இம்மாதிரியான சுயநலம் இல்லாத உயர்குண மக்களைப் பெற்றது நமது தமிழ்நாடு.

கேள்விகள்

1. ஔவையார் யார்?
2. இவர் அதியமான் அரண்மனையில் இருக்கையில் எப்படிப் பொழுது போக்கி வந்தார்?
3. இவர் நெல்லிப்பழத்தை ஏன் உண்ணவில்லை?
4. அரசன் பழம் உண்ட பின் ஔவையாரைப்பற்றி என்ன எண்ணினான்?
5. நீ இப்பாடத்திலிருந்து அறியும் நீதி யாது?

பயிற்சி

1. நீ இப்பாடத்தால் அறிந்துகொண்ட புதிய சொற்கள் எவை?

2. நெல்லிப்பழம், அதியமான், ஔவையார், சுயநலம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. இப்பாடத்தை மௌனமாகப் படி.

4. இக்கதைக்குப் பொருத்தமான தலைப்புக் கொடு.

5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :-

6. முதல் இரண்டு பிரிவுகளில் உள்ள பெயர்ச்சொற்களை எழுது.

7. மூன்றும், நான்காம் பிரிவுகளில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.

8. ஐந்தாம் பிரிவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை? அதில் உள்ள பெயர்ச் சொல், வினைச் சொற்களைக் கட்டம் போட்டு எழுது.

27. போலீஸ் சேவகர்

புதிய சொற்கள் :—சாலை—போகும்படி—வரும்படி—எதிர்ப்பக்கம்—வலப்புறம்—மற்றொரு—நீட்டுகிறார்—போகச் செய்—இல்லாமல்—இல்லாவிடில்—சரியாக—போகாவோ—மோதிக்கொள்ளும்—சேதப்படும்—காயம் — நீக்கவே — செய்வாரோ—இடப்புறம்—விதிப்படி—அபாயம்.

(சம்பாஷணை)

கண்ணன் :—மாமா, இங்கு நிற்கும் இவர் யார்?

மாமன் :—கண்ணா, இவர் போலீஸ் சேவகர்.

கண்ணன் :—இவர் ஏன் இங்கு நிற்கிறார்?

மாமன் :—இவர் இந்தச் சாலையில்வரும் வண்டிகளை யும், போகும் வண்டிகளையும் ஒழுங்காகப் போகும்படியும் வரும்படியும் செய்வார். அங்குப் பார்: ஒரு மோட்டார் வருகிறது. அது இவருக்கு எதிர்ப் பக்கத்தில் இருந்து வருகிறது. இவருக்கு வலப்புறம் இருந்து மற்றொரு மோட்டார் வருகிறது. இவர் இந்த மோட்டாரை நிறுத்த, தமது வலக் கையை நீட்டுகிறார். இந்த மோட்டார் நின்று விட்டது. உடனே அந்த மோட் டார் தடை இல்லாமல் போக வழி உண் டாகிறது. இவர் அது போனவுடன் இதைப் போகச் செய்வார்.

கண்ணன் :—இவர் இங்கு இராவிடில் இந்த வண்டிகள் சரியாகப் போகாவோ ?

மாமன் :—ஆம். வண்டிகள் சில சம யங்களில் சரியாகப் போகும். சில சம யங்களில் இரண்டும் மோதிக்கொள்ளும். அதனால் இரண்டு வண்டிகளும் சேதப் படும். அவற்றோடு வண்டிகளில் இருப் பவரும் காயம் அடைவர். இக் கெடுதிகளை நீக்கவே இவர் இங்கு நிற்கிறார்.

கண்ணன் :—இவர் மனிதரையும் இப்படியே நிற்கச் செய்வாரோ ?

மாமன் :—இல்லை, இல்லை. நாம் சாலையின் இடப் புறம் போகவேண்டும். நமக்கு எதிரில் வருபவர் வலப்

புறம் வரவேண்டும். இந்த விதிப்படி நடப்பவர்க்குத் தீங்கு வராது.

கண்ணன் :—அப்படியா ! சரி. நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகும் போது சாலையின் இடப்புறமே போவேன் ; வரும் போதும் இடப்புறமே வருவேன்.

கேள்விகள்

1. போலீஸ் சேவகர் உடை என்ன ?
2. அவர் என்ன செய்கிறார் ?
3. அவர் சந்தியில் நிற்காவிடில் என்ன நஷ்டம் உண்டாகும் ?
4. நீ சாலையில் எந்தப் பக்கம் போகவேண்டும்? வரவேண்டும்?

பயிற்சி

1. வலப்புறம் × இடப்புறம்
வலதுபுறம் × இடதுபுறம்
போவேன் × வருவேன்
வரும் × வராது
} இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. மற்றொரு, சரியாக, நீக்கவே, இராவிடில் :—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. போலீஸ் சேவகரைப்பற்றி நான்கு வாக்கியங்கள் சொல்.

4. சாலையைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது :—

(1) நீ சாலையின் —— போகவேண்டும்.

(2) போலீஸ் —— இராவிடில், சாலையில் —— உண்டாகும்.

(3) நமக்கு —— வருபவர் —— போகவேண்டும்.

6. அது வரும் × அது வராது. }
அவை வரும் × அவை வாரா. }
அது போகும் × அதுபோகாது. }
அவை போகும் × அவை போகா. }
இவற்றை நினைவிற் கொண்டு, கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை எழுது :—

{ அது ஓடும் × அது ———.
{ அவை ஓடும் × அவை ———.

{ இது பேசும் × இது ———,
{ இவை பேசும் × இவை ———.

7. ஆறு, பள்ளிக்கூடம், கிளி, மாலை, இரவு, தலை, வால், பகல், புத்தகம்—இவை என்னென்ன பெயர்கள்?

8. இப்பாடத்தில் உள்ள செய்திகளைப் போலீஸ் சேவகரே சொல்வதுபோலச் சொல்.

28. செஞ்சிலுவைச் சங்கம்

புதிய சொற்கள்:—செஞ்சிலுவை — சங்கம்—பொதுமக்கள் — ஏற்பட்டது — கட்டளைகள் — நிறைவேற்றி — அப்புறப் படுத்துவோம்—ஒற்றுமை—அசுத்தம்—விபத்து — எங்க ளால்—கிறுக்க—போடோம்—அழுக்கு—தவறுமல்.

நாங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர் கள். இச் சங்கம் பொது மக்களுக்கு உதவி செய்ய ஏற் பட்டதாகும். இதன் கட்டளைகள் பல. நாங்கள் அவற்றை நிறைவேற்றி வருகிறோம்; நாங்கள் வழியில் கிடக்கும் ஆணி, லாடம், கண்ணாடித் துண்டு முதலிய வற்றை எடுத்து அப்புறப்படுத்துவோம். அவை வழி யில் இருந்தால் என்ன கெடுதி? நீங்களே பதில்

சொல்லுங்கள். நாங்கள் சிறுவர், சிறுமியர் சண்டையிடாமல் பார்த்துக் கொள்வோம்; எங்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளிடம் ஒற்றுமையை உண்டாக்குவோம்;

நோயாளிகளுக்கு உதவி செய்வோம்; வழியில் ஆபத்தில் அகப்பட்டவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வோம்; எங்கள் கண்ணில் பட்ட அசுத்தப் பொருள்களை அப்புறப்படுத்த முயற்சி செய்வோம்.

நாங்கள் திருவிழா நடக்கும் இடங்களுக்குச் செல்வோம்; அங்கு ஏதேனும் விபத்து ஏற்பட்டால், எங்களால் ஆகும் உதவி செய்வோம்; வழியில் வாழைப் பழத் தோல் இருந்தால் அப்புறப்படுத்துவோம். ஏன்? நீங்கள் பதில் சொல்லுங்கள், பார்ப்போம்.

நாங்கள் எங்கள் வீடுகளைச் சுத்தமாக வைத்துக் கொள்கிறோம்; சுவர்களில் கிறுக்கமாட்டோம்; தரையில் காகிதம் முதலியவற்றைப் போடோம்; புத்தகங்களை

அழுக்குப்படாமல் பாதுகாக்கிறோம்; நாளும் தவறாமல் நீராடுகிறோம்; தூய ஆடைகளையே உடுத்துகிறோம்; நல்ல உணவையே உண்ணுகிறோம். எங்களுக்கு நோய் வருவதே இல்லை.

நீங்கள் எங்களைப் போல் இருக்கிறீர்களா ?

கேள்விகள்

1. செஞ்சிலுவைச் சங்கத்தினர் செய்யும் தொண்டு யாது ?
2. அவர்களுக்கு நோய் வருவதில்லை—காரணம் என்ன ?
3. நீ இப் பாடத்தால் அறிவது யாது ?
4. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) வாழைப் ———— தோல் ———— .
(2) லாடம் ———— குத்தும்.
(3) நாங்கள் சுவர்களில் ———— .
(4) நீங்கள் ————ப் போல ———— ?

2. கிறுக்க, வழுக்கி, விபத்து, கட்டளை.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமை :—

(1) வாழைப்பழத் தோல் ——. (வழுக்காது, வழுக்கும்)
(2) ஆணி காலில் ——. (குத்தாது, குத்தும்)
(3) செருப்பு, காலுக்கு ——. (வேண்டாம், வேண்டும்)
(4) பிறருக்கு உதவி ——. (செய்யோம், செய்வோம்)

4. கோடிட்ட இடங்களில் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமானவற்றை அமைத்துப் படி :—

செய்தேன்	செய்தோம்	செய்வாய்	செய்வீர்கள்
செய்தான்	செய்தாள்	செய்தார்கள்	செய்தது

(1) நான் பெட்டி ———. (5) நீ வேலை ———.
(2) அவன் பெட்டி ———. (6) அவர்கள் வேலை ———.
(3) அவள் சமையல் ———. (7) நீங்கள் வேலை ———.
(4) நாங்கள் வேலை ———. (8) அது வேலை ———.

5. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் படி :—

பாடம்	பெட்டி	பேனா	சட்டை

(1) அவன் ——— எடுத்தான்.
(2) அவள் ——— படித்தாள்.
(3) அவன் ——— வாங்கினான்.
(4) இவன் ——— போட்டுக்கொண்டான்.

29. வஞ்சி மாநகரம்

புதிய சொற்கள் :—வஞ்சி மாநகரம்—சேர நாடு—தலை நகரம் —முன் காலம்—பகுதி—கோட்டை—அகழி—முதலைகள் —பகைவர்—இயந்திரம்—காவல் காடு—மதில் — பாது காவல்—நடு நாயகமாக—பிரபுக்கள்—வாத்தியக்காரர்— காவற்காரர்—படை வீரர்—புத்தர்—அருகன்—சமணர் — பள்ளி—மதத்தார்—பிரசங்கங்கள் — நடைபெற்றன —சிறந்து—முத்திரை — வில்—வென்றுர்கள்.

வஞ்சி மாநகரம் சேரநாட்டின் தலைநகரம். சேரநாடு என்பது மலையாள நாடு. அது முன் காலத்தில் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. இப்பொழுது வஞ்சி மாநகரம் அழிந்த கிராமமாக இருக்கிறது. ஆனல், அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மிகப் பெரிய அழகிய நகரமாக இருந்தது.

வஞ்சி மாநகரம் கோட்டையை உடையது. கோட்டைக்கு வெளியே ஆழமான அகழி இருந்தது. அதில் முதலைகள் விடப்பட்டு இருந்தன. கோட்டை மீது பகைவரைத் தாக்கப் பல விதமான இயந்திரங்கள் வைக்கப்பட்டு இருந்தன. அகழிக்கு வெளியே ‘காவல் காடு’ ஒன்று இருந்தது. பகைவர் காட்டைக் கடந்து அகழியைத் தாண்டி, மதில் ஏறிக் குதித்துத்தான் கோட்டைக்குள் வரவேண்டும். அந்த நகரம் இவ்வளவு பாதுகாவலை உடையதாக இருந்தது.

கோட்டைக்குள் அரசன் அரண்மனை நடுநாயக மாக இருந்தது. அதைச் சுற்றி அமைச்சர் முதலிய உத்தியோகஸ்தர் வாழும் தெருக்களும், வியாபாரிகள் தெருக்களும், பிரபுக்கள் வாழும் தெருக்களும், பாடுவோர் —ஆடுவோர்— பலவகை வாத்தியக்காரர் வாழும் தெருக் களும் இருந்தன; அப்பம் விற்போர், பிட்டு விற்போர், உப்பு விற்போர் முதலிய சிறிய வியாபாரிகள் வாழும் தெருக்களும் இருந்தன. படை வீரர் வீதிகளும், காவற் காரர் தெருக்களும் கோட்டைக்குள் இருந்தன.

வஞ்சி மாநகரில் சிவபெருமான் கோயில், பெரு மாள் கோவில், முருகன் கோவில், புத்தர் கோவில், முதலியனவும் சிறிய தெய்வங்களின் கோவில்களும் இருந்தன. பௌத்தர், சமணர் மடங்களும் பொது இடங்களும் இருந்தன. பொது இடங்களில் பல மதத்தார் பிரசங்கங்கள் நடைபெற்றன. வஞ்சி மாநகரம் அக்காலத்தில் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்து விளங்கியது.

இந்தப் பெரிய நகரத்தைச் சேர மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் முத்திரை வில். அவர் கள் வெளி நாடுகளுடன் கடல் கடந்து வியாபாரம் செய் தார்கள்; இமயமலை வரை படையெடுத்துச் சென்றார்கள்; பகைவர்களைப் பலமுறை வென்றார்கள்; தமிழை வளர்த் தார்கள்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார்கள்.

கேள்விகள்

1. வஞ்சிமா நகரம் இப்பொழுது எப்படி இருக்கிறது ?
2. அதன் பழைய சிறப்பு யாது ?
3. கோட்டைக்கு வெளியே இருந்தவை எவை ?
4. கோட்டைக்கு உள்ளே இருந்தவை எவை ?
5. அரண்மனையைச் சுற்றி இருந்த தெருக்கள் எவை ?
6. அந்நகரில் இருந்த கோவில்கள் எவை ?
7. அரசர்கள் எப்படிப் பட்டவர்கள் ?
8. நீ இப் பாடத்தால் அறியும் நகர அமைப்பு யாது ?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாகப் படி ; பிரிவுகளுக்குத் தலைப்புக் கொடு.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) சேரர்——வஞ்சி——.

(2) கோட்டையின்—— —— இருந்தது.

(3) கோட்டையைச் —— அகழி——.

3. அகழி, கோட்டை, வெற்றி, வியாபாரம்.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. பகைவர், பகைமை, அகன்ற, பெரிய—எதிர்ப் பதங்களைக் கூறு.

5. கந்தன் பெட்டியைத் திறந்தான். வள்ளி பாட்டுப் பாடினாள். கண்ணன் கணக்குப் போட்டான். முருகன் பந்து ஆடினான்.—பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் கூறுக.

6. கந்தன், பாட்டு, கணக்கு, பந்து—என்ன பெயர்ச் சொற்கள் ?

7. ஒரே வாக்கியம் ஆக்குக :—

(1) அன்னையார் அழைத்தார் ; மிட்டாய் தந்தார்.

(2) ஆசிரியர் வந்தார் ; பாடம் போதித்தார்.

(3) தகப்பனார் போனார் ; புத்தகம் வாங்கினார்.

8. இரண்டு வாக்கியங்கள் ஆக்குக: —

(1) அண்ணனோடு போய் அப்பம் வாங்கினேன்.

(2) அக்காளை அழைத்து அடுப்பு ஊதச் சொன்னேன்.

(3) பாட்டியை வேண்டிப் பழையது வாங்கினேன்.

9. பொருத்தமானவற்றைச் சேர்த்து எழுது :—

(1) மாடு ஒரு	பறவை
(2) கிளி ஒரு	மிருகம்
(3) வாத்து	குட்டி போடும்
(4) யானை	முட்டை இடும்

30. இரண்டு நண்பர்கள்

(நாடகம்)

புதிய சொற்கள் :—முருகன்—சரவணன் — நெருங்கிய — அயலூர்—கடப்பது—கஷ்டம்—கரடி — அஞ்சவேண்டா — மூச்சை—அடக்கிக்கொண்டு—கூறினாய்—நீடூழி—வாழ்க —கவலை — ஏறிக்கொள் — இதுபற்றி — கவலைப்பட— முகர்ந்து பார்த்து — சந்தியில்—கடவுளே—இறந்தவன்— நீண்ட நாள்—காதண்டை—பழக்கம்—கைவிடும் — நம்பாதே— இரகசியம் — காத்தவன்—யோசனை—புத்தி— முற்றும்.

I

முருகனும் சரவணனும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒருநாள் காட்டைக் கடந்து அயலூருக்குப் போகப் புறப்பட்டனர்.

முருகன் : சரவணு, நாம் இந்தக் காட்டைக் கடப்பதுதான் கஷ்டம்!

சரவணன் : முருகா, இதைக் கடப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

முருகன் : இந்தக் காட்டில் கரடிகள் அதிகமாக இருக்கின்றன.

சரவணன் : அப்படியா! ஆயினும் அஞ்ச வேண்டாம். கரடி திடீரென வந்தாலும் அச்சம் இல்லை. மூச்சை அடக்கிக்கொண்டு படுத்திருந்தால் கரடி ஒன்றும் செய்யாது. நாம் இறந்தவர் என்று எண்ணிக் கரடி ஓடிவிடும்.

முருகன் : உண்மைதானு! சரவணு, நல்ல சமயத்தில் இதனைக் கூறினுய். அப்பா, நீ நீடூழி வாழ்க!

சரவணன் : இது உனக்குத் தெரியாவிட்டாலும் கவலை இல்லை. கரடிக்கு மரம் ஏறத் தெரியாது. ஆத

லால், அது வரும்பொழுது நீ மரத்தில் ஏறிக்கொள். அது போய்விடும்.

முருகன் : அப்பா, எனக்கு மரம் ஏறத் தெரியாது. நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

சரவணன் : நீ இதுபற்றிக் கவலை கொள்ளாதே.

II

[இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டு செல்லுகையில், கரடியின் ஓசையைக் கேட்கிறார்கள் ; தூரத்தில் கரடி வருவதைப் பார்க்கிறார்கள். கரடி இவர்களைப் பார்த்து ஓடி வருகிறது.]

முருகன் : நண்பா, கரடி ஓடி வருகிறதே ! என்ன செய்வோம் ?

சரவணன் : முருகா, நான் மரத்தில் ஏறிக்கொள்வேன். நீ மரத்தடியில் மூச்சைப் பிடித்துக்கொண்டு படுத்துக் கிட. கரடி உன்னை முகர்ந்து பார்த்துப் போய்விடும்.

முருகன் : என்னைச் சந்தியில் விட்டுவிட்டாயே! அடே! சரவணா, எனக்கு மரம் ஏறத் தெரியாதே!

சரவணன் : அடே, முருகா, கரடி வந்துவிட்டது. கதை பேச நேரம் இல்லை. நான் சொன்னபடி செய். இல்லாவிடில் கரடிக்கு இரை ஆவாய். (என்று சொல்லிக்கொண்டே மரத்தின்மீது ஏறிவிடுகிறான்.)

முருகன் : கடவுளே, நீதான் துணை. என் நண்பனும் என்னைக் கைவிட்டான். (என்று சொல்லிக்

கொண்டே நிலத்தில் விழுகிருன்; மூச்சை அடக்கிக் கொண்டு இறந்தவன் போலக் கிடக்கிருன்.)

[கரடி ஓடி வருகிறது; மரத்தின்மேல் சரவணன் இருப்பதைப் பார்க்கிறது. கீழே கிடக்கும் முருகனிடம் போகிறது; அவன் மூக்கில் மூச்சு வருகிறதா என்பதைக் கவனிக்கிறது; மூச்சு ஓட்டம் இல்லாததால், அவன் இறந்துவிட்டான் என்று எண்ணிக்கொண்டு திரும்பிப் போகிறது.]

கரடி போன பிறகு சரவணன் மரத்திலிருந்து இறங்குகிருன்; இறங்கி, முருகனேத் தூக்கி விடுகிருன்.

சரவணன்: (சிரித்துக்கொண்டே) முருகா, கரடி உனக்கு நீண்ட நாள் பழக்கம் உடையதோ? அது, உன் காதண்டை ஏதோ இரகசியம் பேசியதே!

முருகன்: ஆம். கரடிக்கும் எனக்கும் நீண்ட நாள் பழக்கம் உண்டு. அது என் காதண்டை என்ன சொல்லியது தெரியுமா? அது, 'ஆபத்தில் கைவிடும் நண்பரை நம்பாதே' என்று இரகசியமாகக் கூறியது.

சரவணன் : முருகா, நான் உன்னைக் கைவிடவில்லையே. மூச்சை அடக்கிக் கிடக்கும்படிச் சொன்னவன் நான் அல்லவா? நான் இல்லாவிடில் நீ இறந்திருப்பாயே! உன்னைக் காத்தவன் நான் அல்லவா? 'ஆபத்தில் யோசனை சொல்லும் நண்பனை நம்பு!' என்று கரடி உனக்குப் புத்தி சொன்னது என்று அல்லவோ நினைத்தேன்!

[முருகன் சிரித்துக்கொண்டே சரவணன் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'நண்பனே, நீ கூறியது முற்றும் உண்மையே. நீ இல்லாவிடில் நான் இறந்தே இருப்பேன். என்னைக் காத்தவன் நீயே' என்று கூறி, அவனைத் தழுவிக்கொள்கிறான்.]

31. செய்யுள் பாடம்

I

சிட்டுக் குருவி

சிட்டுக் குருவிச் சிறு பெண்ணே !
சித்தம் போலச் செய்பவளே !
கொட்டிக் கிடக்கும் தானியமும்
கொல்லைப் புழுவும் தின்பவளே !
எட்டிப் பறந்தால் மண் முழுதும்
ஏறிப் பறந்தால் வானமெல்லாம்
இஷ்டப் படி நீ செய்கையிலே
ஏன் என் பாரைச் 'சீ' என்பாய்.
உன்னைக் கேட்பேன் ஒரு சேதி
உரிமைப் பெண்ணின் நன்மகளே !
தின்னத் தீனி தந்திடுவேன்
தெரிவிக் காமல் ஓடாதே!
உன்னைப் போலே இன்பத்தில்
ஊறும் வகைதான் என்னேடி ?

—புதுவை-கவிதாமண்டலம்

II

வழி நடத்தல்

('சென்று கனி பறித்துக்கொண்டு' என்ற மெட்டு)

மரங்கள் அடர்ந்திருக்குங் காடு—கரு
வானில் உயர்ந்த மலை மேடு—தம்மில்
பிரிந்து பிரிந்து செல்லும் வழியாய்—நாம்
பிரியத்துடன் நடப்போம் விரைவாய்—
பெருங் குரலில் பாட்டும்
பேச்சும் விளையாட்டும்—நம்மை
விரைவில் அவ்விடம் கொண்டு கூட்டும். (1)

இளமை தன்னில் வலிமை சேர்ப்போம்—நாம்
எதிலும் தைரியத்தைக் காப்போம்—நாம்
அளவில் லாதநாள் வாழ—உடல்
அழகும் உறுதியும் உண்டாக
ஆசை கொண்டு நடப்போம்
அச்சமதைத் தொலைப்போம்—நம்
நேசர் பலரும் மனங் களிப்போம்—(மர) (2)

—புதுவை-கவிதாமண்டலம்

III

கல்வி

1. இளமையில் கல்.
2. வித்தை விரும்பு.
3. நூல் பல கல்.
4. ஓதுவது ஒழியேல்.
5. எண் எழுத்து இகழேல்.

—ஆத்திசூடி

6. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
7. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
8. பிச்சை புகினும் கற்கை நன்றே.

—கொன்றை வேந்தன்

பெற்றோர்

9. தந்தை தாய்ப் பேண்.

—ஆத்திசூடி

10. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

—கொன்றை வேந்தன்

பெரியோர் சொல்

11. மேன்மக்கள் சொல் கேள்.

—ஆத்திசூடி

12. மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்.

—கொன்றை வேந்தன்

நன்றி

13. நன்றி மறவேல்.

—ஆத்திசூடி

14. செய்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.

—உலக நீதி

ஊக்கம்

15. ஊக்கமது கைவிடேல்.

—ஆத்திசூடி

16. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

—கொன்றை வேந்தன்

கோபம்

17. ஆறுவது சினம்.

—ஆத்திசூடி

18. தீராக் கோபம் போராய் முடியும்.

—கொன்றை வேந்தன்

பொருள்

19. பொருள்தனைப் போற்றி வாழ்.

—ஆத்திசூடி

20. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.

—கொன்றை வேந்தன்

பயிர்த் தொழில்

21. பருவத்தே பயிர்செய்.
22. பூமி திருத்தி உண்.
23. நெற்பயிர் விளை.

—ஆத்திசூடி

24. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
25. மேழிச் செல்வம் கோழை படாது.

—கொன்றை வேந்தன்

IV

வெற்றிவேற்கை

அழகு

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை.
4. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
5. வறிஞர்க் கழகு வறுமையில் செம்மை.

அல்லர்

6. பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
7. சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
8. பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்.
9. உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்.

இல்லை

10. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
11. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
12. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
13. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

நன்றே

14. கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே.
15. சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.